SLECIC

# ஆண்டறிக்கை 2015

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டும் நோக்கங்கள் மேற்படி சட்டத்துக்கு ஏற்ப வகுக்கப்பட்டுள்ளன.

# வருடாந்த அறிக்கை – 2015

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

*இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இஏககாகூ), ஒழுங்கமைப்பின் தொழிற்பாடுகளுக்கு வழிகாட்டுகின்ற குறிக்கோள்களின் தொகுதியை எடுத்துக்காட்டுகின்றதும் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுமான தொழில்முயற்சியொன்றாகவுள்ளது.*

## *எமது தொலைநோக்கு*

***"சர்வதேச வியாபாரத்தை ஊக்குவிப்பதிலும் அபிவிருத்திசெய்வதிலும் வினையூக்கியாகவிருத்தல் "***

## *எமது பணி*

***"ஏற்றுமதியாளர்கள், வங்கிகள், ஏனைய நிதிநிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் என்போருக்குத் தகவல் வழங்கும் தொழிலில் நாம் உள்ளோம். உயர்தரத்தினவான தனிப்பட்ட சேவைகளை முனைவதன்மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை விஞ்சுவதற்கு முயற்சிக்கின்றோம் "***

## ஒரு நோக்கில் ஐந்து வருடங்கள்

செயல்நிறைவேற்ற மேல்நோக்கு (ரூபா மில்லியன்)

| இஏகககாகூ செயல்நிறைவேற்ற மேல்நோக்கு 2011-2015 (ரூபா மில்லியன்) | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| காப்புறுதிசெய்யப்பட்ட தொழில் | 15,835 | 23,735 | 21,076 | 25,173 | 27,721 |
| முழுமொத்தக் கட்டுப்பண வருமானம் | 143 | 174 | 163 | 195 | 228 |
| முழுமொத்த உரிமைக் கோரிக்கைகள் | 32 | 64 | 32 | 64 | 80 |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | 98 | 114 | 70 | 121 | 162 |
| தொழிற்பாட்டு மேன்மிகை | 65 | 82 | 73 | 90 | 83 |
| முதலீட்டு வருமானம் | 66 | 91 | 133 | 100 | 139 |
| தேறிய மேன்மிகை | 89 | 101 | 139 | 162 | 174 |
| மூலதனமும் ஒதுக்கும் | 1,220 | 1,388 | 1,581 | 1,758 | 1978 |
| வரிகளும் அறவீடுகளும் | 42 | 73 | 67 | 29 | 50 |



























# தலைவரின் மீளாய்வு

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (இஏககாகூ) தலைவரென்றமுறையில், உலகளாவியரீதியிலும் உள்நாட்டுரீதியிலும் குழப்பங்கள்நிறைந்த ஆண்டாகவிருந்தவோர் ஆண்டின்போது மெச்சத்தக்கமுறையில் செயல்நிறைவேற்றுவதற்கு எல்லா முட்டுக்கட்டைகளையும் சவால்களையும் மேற்கொள்வதற்கு எமது கூட்டுத்தாபனம் இயன்றதாகவிருந்ததென வெளிப்படுத்துவதற்கு மகிழ்ச்சியடைகின்றேன்.

**உலகப் பொருளாதாரம்**

முன்னேற்றமடைந்த சந்தைகளிலிருந்த பொருளாதார நிலைமைகள் சீராகிய அதேவேளையில், பல உருவாகிவருகின்ற சந்தைகளில் பொருளாதார முறைகள் குறிப்பிட்டமுறையில் சீர்கேடடைந்ததுடன், உலகளாவிய பொருளாதாரம் 2015 ஆம் ஆண்டில் பலவீனமானதாகவுமிருந்தது. இதன்விளைவாக, உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2.6 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது: 2014 ஆம் ஆண்டில் இது 2.8 சதவீதமாகவிருந்தது.

**ஐரோப்பிய வலய மீட்பினால் ஆதாரப்படுத்தப்பட்ட முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்**

2015 ஆம் ஆண்டில் முன்னேற்றமடைந்த சந்தைகளுக்கிடையே படிப்படியான பொருளாதார வளர்ச்சியும் ஐரோப்பிய வலயத்திலான பொருளாதார மீட்பும் காணப்பட்டன. 2013 ஆம் ஆண்டின் நடுப்பாகத்திலிருந்து ஐரோப்பியவலயம் ஆக்கபூர்வமான பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது, ஆனால் 2015 ஆம் ஆண்டில் அது கூடுதலாகத் துரிதமடைந்தது; கிரேக்கம் தவிர – எல்லா ஐரோப்பியவலய உறுப்புநாடுகளிலுமான வளர்ச்சி அதிகரித்து வருகின்றது. எனினும், ஐரோப்பிய வலயத்தின் பொருளாதாரம் 1.5 சதவீதத்தினால் மட்டுமே வளர்ந்தமையினால் அதன் மீட்பு குறைந்த மட்டத்திலிருந்தது; இது, அதன் வரலாற்றுமுறையான சராசரிக்கு மிகவும் குறைவானதாகவிருந்தது. பிரான்சு, இத்தாலி போன்ற பெரிய உறுப்பு நாடுகளில் பலவீனமான செயல்நிறைவேற்றத்துடன் வளர்ச்சியானது சமச்சீரற்றதாகவிருந்தது. ஒட்டுமொத்தத்தில், தொழிலின்மை குறைந்தளவில் வீழ்ச்சியடைந்த அதேவேளையில் பாவனையாளர் செலவிடுகை 2008 ஆம் ஆண்டிலான அதன் உச்சளவிலும் பார்க்க மிகக்குறைவாகவேயிருந்தது.

ஐரோப்பிய மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் வட்டிவீதங்களைப் பதியப்பட்ட மிகக்குறைந்த அளவுகளுக்குக் கொண்டுவந்தன; இதன்மூலம் நிதிநிலைமைகள் சீராக்கப்பட்டன. இது, கம்பெனிகளுக்கான நிதியளிப்புச் செலவுதொகைகளைக் குறைத்து பாவனையாளர்கள் கடன் பெறுவதனை மலிவாக்கியது. இதன்விளைவாக, ஐரோப்பிய வலயத்திலான கடன்பெறுகை படிப்படியாக அதிகரித்த அதேவேளையில் வங்கிகளும் தமது கடன் நிபந்தனைகளைச் சிறிதுசிறிதாக நெகிழ்வாக்குவதற்கு ஆரம்பித்தன; ஆதலால் கடன்களைப் பெறுதல் ஓரளவு இலகுவாகியது. இந்த இலகுவாக்குகை, கட்டுப்பாடுகளைக் கொண்ட பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்டது; எனினும் கடன் நிபந்தனைகள் சவாலுக்குட்பட்டனவாகவேயிருந்தன.

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பொருளாதாரம் 2015 ஆம் ஆண்டில் படிப்படியாக விசாலித்தது: இதன்மூலம் 2010 ஆம் ஆண்டில் தொடங்கிய போக்கு தொடர்ந்தது. முதலாவது காலாண்டில் நிலவிய கொடிய குளிர்காலக் காலநிலையைப் பொருட்படுத்தாது, பொருளாதாரம் 2.5 சதவீதத்தினால் வளர்ந்தது. அதிகரித்துவரும் சம்பளங்கள்மூலம் ஊக்குவிக்கப்பட்டு பாவனையாளர் செலவிடுகை அதிகரித்ததுடன் தொழில் முதலீடு திடமாகவிருந்தது. தொழிலின்மையானது 2007 ஆம் ஆண்டிலான அதன் குறைந்த மட்டத்தை அண்மிக்கின்றவகையில் தொடர்ந்து வீழச்சியடைந்தது, ஆனால் தொழிலாளர் பங்குபற்றுகை

பின்தங்கிநின்றது. குறைந்த விலைகளின் பிரதிபயனாக எண்ணெய்த்துறையிலான செயற்பாடுகள் குறைவாகியமையினால் பொருளாதார வளர்ச்சி பலவீனமடைந்து கூடுதல் பெறுமதிகொண்ட ஐஅநாடொலரின் விளைவாக ஏற்றுமதிகள் குறைந்தன.

**உருவாகிவருகின்ற சந்தைகளுக்கிடையேயான பாரிய ஒவ்வாமைகள்**

பல உருவாகிவருகின்ற சந்தைகளிலான நிலைமைகள் 2015 ஆம் ஆண்டில் மிகவும் சீர்கெட்டன. மிகப்பெரிய சந்தைகளிடையே, சீனப் பொருளாதாரம் மேலும் மந்தமடைந்ததுடன் ரூசியாவும் பிரசிலும் பாரிய பின்னடைவுக்குள்ளாகின. சீனப் பொருளாதாரத்திலான மந்தமானநிலை அதன் வியாபாரப் பங்காளர்களின்மீது பங்கமான தாக்கமொன்றையும் கொண்டிருந்ததுடன் வியாபாரப்பொருட்களுக்கான கோரிக்கையையும் குறைத்தது.

உண்மையில், வியாபாரப்பொருட்களின் ஏற்றுமதிகளின்மீது பெருமளவு நம்பியிருக்கும் நாடுகளும், வியாபாரப்பொருட்களின் விலைகளிலான வீழ்ச்சியின் விளைவாகக் குறைந்த வருமானத்தை எதிர்நோக்கின. இப்பொருளாதார இக்கட்டான நிலைமைகளுடன்சேர்த்து, ஐஅநாடுகளில் பணக்கொள்கை கட்டுப்பாடுடையதாகவருவதனை எதிர்பார்த்து, சர்வதேச முதலீட்டாளர்கள், உருவாகிவருகின்ற பல சந்தைகளிலிருந்து மூலதனத்தின் பெருந்தொகைகளை மீளப்பெற்றனர். இந்நிகழ்வுகளின் விளைவாக, உருவாகிவருகின்ற பல சந்தைகளில் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், உருவாகிவருகின்ற சந்தைகள் எல்லாம் இவ்வாறு வீழ்ச்சியடையவில்லை. எண்ணெய், உருக்கு மற்றும் நிலக்கரி போன்ற வியாபாரப்பொருட்களின் இறக்குமதிமீது நம்பியுள்ள நாடுகள் குறைந்த விலைகளின்மூலம் நன்மைபெற்றன; ஏனெனில், இது, பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதலளித்து, உள்நாட்டுப் பண்டங்களின்மீது செலவழிப்பதற்கு மூலவளங்களுக்கு இடமளித்தது.

மத்திய அமெரிக்காவிலுள்ள பலநாடுகள் ஐஅநாடுகளுக்கான ஏற்றுமதிகள்மீது பெருமளவு நம்பியிருப்பதனால் அவையும் ஐஅநாடுகளின் வளர்ச்சியிலிருந்து நன்மைபெற்றன. இதேபோன்று, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், உயர்வான ஏற்றுமதிகளின்மூலமும் கூடுதலான உள்முக முதலீட்டின்மூலமும், ஐரோப்பிய வலயத்திலான மீட்பிலிருந்து நன்மைபெற்றன.

**குறைந்துவருகின்ற உலகளாவிய வியாபாரப்பொருள் விலைகள்**

எண்ணெய் விலைகளிலான பாரிய வீழ்ச்சி, உலகப் பொருளாதாரத்துக்கான பெருமளவு பின்விளைவுகளுடன் ஒரு வளருகின்ற நிகழ்வாகவுள்ளது. 2008 யூன் மாதத்தில் ஒரு பீப்பாவுக்கு $146 என்பதிலிருந்து, பண்படுத்தப்படாத எண்ணெயின் விலை 2015 ஒற்றோபர் மாதத்தில் ஒரு பீப்பாவுக்கு $46 என்ற விலையை எய்தியது. இந்த நிகழ்வு, கோரிக்கை – பக்கக் காரணிகளையும் வழங்கல் - பக்கக் காரணிகளையும் பிரதிபலிக்கின்றது.

ஆனால் எண்ணெய் மற்றும் வாயு விலைகளிலான வீழ்ச்சி, ரூசியா மற்றும் வெனிசுயெலா போன்ற ஹைதரோகார்பனினால் உந்தப்பட்ட பொருளாதாரங்களுக்கு ஆபத்தானதாக

எண்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய எண்ணெய் ஏற்றுமதிசெய்யும் நாடுகள் (கசக்ஸ்டான், சவூதி அரேபியா), குறைந்துவருகின்ற ஹைதரோகார்பன் அரசிறைகளைப் பொறுப்பதற்கு அவற்றைச் சிறந்தமுறையில் இயலச்செய்கின்ற நிதி அடிதாங்கிகளை உடையன.

எண்ணெய் மற்றும் வாயு விலைகளிலான வீழ்ச்சி, உலகளாவிய வியாபாரப்பொருள் விலைகளில் கூடுதற்பரந்த மாற்றங்களை வெளிக்காட்டுகின்றன. எண்ணெய் மற்றும் வாயு விலைகளிலான குறைவு போன்று எரிபொருள்சாரா வியாபாரப்பொருட்களின் உலகளாவிய விலைகளின் வீழ்ச்சி, வறுமையான குடும்பங்களுக்கும், பொருள் தீவிர உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் இயற்கை மூலவளங்கள் குறைந்த பொருளாதாரங்களுக்கும் நன்மைபயக்கும். எவ்வாறாயினும், உலகளாவிய வியாபாரப்பொருள் விலைகளிலான மாற்றம், மூலவள-தீவிர உருவாகிவருகின்ற சந்தைகளின்மீதான அழுத்தத்தை அதிகரிக்கின்றது.

**சர்வதேச வியாபாரத்தின் மந்தமான வளர்ச்சி**

வியாபாரப்பொருட்களின் குறைவு, சர்வதேச வியாபாரம் அண்மைக் காலத்தில் மந்தமாவதில் குறிப்பிடத்தக்க பங்கையளிக்கின்றது. பண்டங்களிலும் சேவைகளிலுமான எல்லைகளுக்கிடையேயான வியாபாரம் 2009 ஆம் ஆண்டில் பெருமளவுக் குறைவை எய்தியது; 2010 முதல் 11 வரையில் பாரிய எதிர்விளைவொன்று ஏற்பட்டது. ஆனால் சர்வதேச வியாபாரத்தின் அளவு, 2012 முதல் 15 வரையில் சிறிதளவே வளர்ந்தது. உலகளாவிய வியாபாரம் 2016 ஆம் ஆண்டில் 4.1 சதவீதத்தினால் விசாலிக்குமென எதிர்வுகூறப்படுகின்றது.

**இலங்கையின் பொருளாதாரம்**

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ளபடியான பொருளாதார வளர்ச்சி 4.8 சதவீதத்தைப் பதிவுசெய்தது; 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 4.9 சதவீதமாகவிருந்தது. உலகளாவியச் சந்தையிலான எதிர்மறையான போக்கைப் பொருட்படுத்தாது, மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களினதும் மாண்புமிக்க பிரதம அமைச்சரினதும் நல்லாட்சிக் கொள்கைகள், உள்நாட்டுப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை நிலைபெறத்தக்கதாக்குவதனை இயலச்செய்தன. குறிப்பாக நல்லாட்சியும் திறந்த கொள்கைகளும், தொழிற் சமுதாயத்தினர் தமது கொடுக்கல்வாங்கல்களை உறுதியாக வைத்திருப்பதனை இயலச்செய்தன. சர்வதேசப் பண நிதியத்தினதும் உலகத்தின் அபிவிருத்தியடைந்துள்ள பொருளாதாரங்களினதும் நம்பிக்கையைப் பெற்றிருந்த மாண்புமிக்க நிதி அமைச்சர் எமது பொருளாதாரத்துக்கு மேலதிக வலிமையையளித்துள்ளார்.

**ஏற்றுமதிச் செயல்நிறைவேற்றம்**

2015 ஆம் ஆண்டில் செய்த ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகள், சர்வதேச வியாபாரப்பொருள் விலைகளின் கீழ்நோக்கிய அசைவையும் பாரிய பொருளாதாரங்களிலான மந்தமான வளர்ச்சியையும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிச் சேரிடங்களையும் பிரதிபலித்தன.

அதற்கிணங்க, 2014 ஆம் ஆண்டில் 7.1 சதவீதத்தில் வளர்ந்த ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகள், 2015 ஆம் ஆண்டில், ஆண்டுக்காண்டு, 5.6 சதவீதத்தினால், 10,505 மில்லியன் ஐஅநாடொலருக்குக் குறைந்தன; கமத்தொழில் மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலான வீழ்ச்சி இதற்கு இட்டுச்சென்றது.

மொத்த ஏற்றுமதிகளின் 23.6 சதவீதமாக அமைகின்ற கமத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகள், குறிப்பிடத்தக்கவகையில் 2015 ஆம் ஆண்டில் 11.2 சதவீதத்தினால் 2,481 மில்லியன் ஐஅநாடொலருக்குக் குறைந்தது; தேயிலை மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான குறைவான ஈட்டுகைகள் இதற்கு இட்டுச்சென்றது. இலங்கையில் இரண்டாவது பெரிய ஏற்றுமதி வியாபாரப்பொருளாகவுள்ளதும், மொத்த ஏற்றுமதி ஈட்டுகைகளின் ஏறத்தாழ 13 சதவீதமாக அமைகின்றதுமான தேயிலையிலிருந்தான ஏற்றுமதி ஈட்டுகைகள், 17.7 சதவீதத்தினால் 1,340 மில்லியன் ஐஅநா டொலருக்குக் குறிப்பிடத்தக்கவகையில் குறைந்தன; கடந்த ஐந்தாண்டுகளுக்காக மிகக்குறைவான பெறுமதியை இது பதிந்தது. புவியியல்-அரசியல் நிகழ்வுகள், இறக்குமதியாளர் நாடுகளில் நாணய மதிப்பிறக்கங்கள், மற்றும் எண்ணெயிலிருந்தான அரசிறையின் கணிசமானளவுக் குறைப்பு என்பன, ரூசியா மற்றும் மத்திய கிழக்கிலுள்ள சில நாடுகள் போன்ற பெருமளவு வாங்குநர்களிடமிருந்து இலங்கைத் தேயிலைக்கான கோரிக்கையில் குறிப்பிடத்தக்க குறைப்பை விளைவித்தன.

இதற்கிடையே, 2015 சனவரி நடுப்பகுதியிலிருந்து, சந்தை அணுக்கத்தின்மீதான மட்டுப்பாடுகளுடன், முக்கியமாக ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்குக் கடலுணவு ஏற்றுமதிகள் 75.0 சதவீதக் குறிப்பிடத்தக்க குறைப்பைப் பதிந்தமைகாரணமாகக் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகள், ஆண்டுக்காண்டு, 35.5 சதவீதத்தினால் 163 மில்லியன் ஐஅநா டொலருக்குக் குறைந்தன. எவ்வாறாயினும், தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகளில் பதியப்பட்ட குறைப்பைப் பொருட்படுத்தாது, தெங்குக் கருமூலப்பகுதித் தயாரிப்புகளிலிருந்தான ஈட்டுகைகள், தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகளில் பதியப்பட்ட 100 சதவீதத்துக்கு மேற்பட்ட வளர்ச்சி காரணமாக 3.5 சதவீதத்தினால் அதிகரித்தன. முக்கிய ஏற்றுமதிப் பயிர்களிலான பாரிய அறுவடையின் விளைவாக, அதாவது மிளகும் கராம்பும், வாசனைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகள் 2015 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்கவகையில் 42.7 சதவீதத்தினால் 377 மில்லியன் ஐஅநா டொலருக்கு அதிகரித்தன. எவ்வாறாயினும், விலை மட்டங்களில் பதியப்பட்ட அதிகரிப்பைப் பொருட்படுத்தாது, ஏற்றுமதித் தொகைகளில் பதியப்பட்ட குறைப்புக்காரணமாக, கறுவாவிலிருந்தான ஏற்றுமதி ஈட்டுகைகள் 0.2 சதவீதத்தினால் விளிம்பளவில் குறைந்தன.

2012 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகக் குறைந்துவந்த இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகள், 2015 ஆம் ஆண்டில் மேலும் பலவீனமடைந்தன; உலகளாவியரீதியில் குறைவான கோரிக்கையினால் இட்டுச்செல்லப்பட்ட, உலகளாவிய இறப்பர் விலைகளில் தொடர்ச்சியான குறைப்பின் தாக்கத்தை இது பிரதிபலித்தது. இதன்விளைவாக, இறப்பரிலிருந்தான ஏற்றுமதி ஈட்டுகைகள் 2015 ஆம் ஆண்டில், 42.3 சதவீதத்தினால் 26 மில்லியன் ஐஅநா டொலருக்குக் குறைந்தன; ஏற்றுமதித் தொகைகளிலும் விலைகளிலுமான குறைப்புகள் இதற்கு இட்டுச்செல்கின்றன.

மொத்த ஏற்றுமதி ஈட்டுகைகளின் ஏறத்தாழ 46 சதவீதமாக அமைகின்ற புடவைகள் மற்றும் தைத்த ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி ஈட்டுகைகள், புடவைகளிலும் ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்களிலும் பதியப்பட்ட, முறையே, 4.5 சதவீத மற்றும் 13.4 சதவீத வளர்ச்சியைப் பொருட்படுத்தாது, முக்கியமாகத் தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகளில் பதியப்பட்ட 2.7 சதவீதக் குறைப்புக் காரணமாக, 2.2 சதவீதத்தினால் குறைந்தன. ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்குத் தைத்த ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி ஈட்டுகைகள், 2015 ஆம் ஆண்டில் 12.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்கவகையில் குறைந்தன; முறையே, ஐஅநாடுகளுக்கும் ஏனைய பாரம்பரியஞ்சாராச் சந்தைகளுக்கும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகளில் பதியப்பட்ட 6.0 சதவீத மற்றும் 4.6 சதவீத வளர்ச்சியைப் பொருட்படுத்தாது, தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான ஈட்டுகைகளிலான குறைப்புக்கு இது பெருமளவில் பங்களித்தது.

சேவைகள் கணக்கு அதிகரித்ததாகவிருப்பதற்கு ஆதரவளித்து, 2015 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணத்துறையிலிருந்தான ஈட்டுகைகள் கணிசமானளவு அதிகரித்தன. 2015 ஆம் ஆண்டில் சுற்றுலாப்பயணத்துறையிலிருந்தான ஈட்டுகைகள் 22.6 சதவீதத்தினால் 2,981 மில்லியன் ஐஅநா டொலருக்கு அதிகரித்தன; ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் இது 2431 மில்லியன் ஐஅநா டொலராகவிருந்தது. சுற்றுலாப்பயணத்துறையிலிருந்தான ஈட்டுகைகளின் வளர்ச்சி, சுற்றுலாப்பயணிகளின் வருகைகளிலும் சுற்றுலாப்பயணிகளின் செலவிடுகையிலுமான தொடர்ச்சியான அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டது.

பல்வேறு சுற்றுலாப்பயண ஊக்குவிப்புச் செயற்பாடுகளின் ஆதரவுடனும் ஹோட்டல் தொழிலிலான ஆற்றலின் விசாலிப்புடனும், அடுத்துவரும் ஆண்டுகளில் வளர்ச்சித்துரிதம் தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையே, பொழுதுபோக்கு, கல்வி மற்றும் உடனல நோக்கங்களுக்காக இலங்கையில் வதிவோர் வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கான அக்கறையைப் புதுப்பித்தமையினால், உட்செலுத்துகைகளிலும் பார்க்கக் குறைவான வீதத்தில் இருப்பினும், பயணம் காரணமான வெளிச்செலுத்துகைகளும் வளர்ந்தன.

**செலாவணி வீத அசைவுகள்**

2015 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது இலங்கை ரூபா பரந்தளவில் நிலையுறுதியாகவிருந்தது; ஆனால் செலாவணி வீதத்தைத் தீர்மானிப்பதில் கூடுதலான நெகிழ்வுத்தன்மையை அனுமதிப்பதற்கு மத்திய வங்கியின் முடிபின்விளைவாக, அதன்பின்னர் கணிசமானளவு மதிப்பிறக்கமடைந்தது.

எவ்வாறாயினும், 2015, செத்தெம்பர் 03 ஆந்திகதியன்று, மத்திய வங்கி, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அதன் இடையீட்டை வரையறுப்பதற்கு முடிபுசெய்து சந்தையின் கோரிக்கை மற்றும் வழங்குகை நிலைமைகளினால் செலாவணி வீதம் பெருமளவில் தீர்மானிக்கப்படுவதனை அனுமதித்தது. 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் 04 ஆந்திகதியிலிருந்து அவ்வாண்டின் முடிவுவரையான காலப்பகுதியின்போது, இலங்கை ரூபா ஐஅநா டொலருக்கெதிராக 6.64 சதவீதத்தினால் மதிப்பிறக்கப்பட்டதனை இது விளைவித்தது.

ஒட்டுமொத்தத்தில், 2015 ஆம் ஆண்டின் முடிவில் 9.03 சதவீதத்தினால் 144 ரூபா 06 சதத்துக்கு ஐஅநா டொலருக்கெதிராக ரூபாவானது மதிப்பிறக்கப்பட்டது.

**இரககாகூட்டுத்தாபனத்தின் செயல்நிறைவேற்றம்**

2015 ஆம் ஆண்டு இரககாகூட்டுத்தாபனத்துக்குக் குறிப்பிடத்தக்க ஆண்டாகவிருந்தது. இவ்வாண்டு ஏற்றுமதியாளருக்கும் வங்கித்தொழில் சமுதாயத்தினருக்கும் 37 ஆண்டுச் சேவையை அளித்தது மட்டுமல்லாமல், அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவே மிகச்சிறந்த செயல்நிறைவேற்ற ஆண்டாகவுமிருந்தது. மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது, இரககாகூ, அதன் மொத்தக் காப்புறுதிசெய்யப்பட்ட தொழிலில் 27.77 மில்லியன் ரூபாவுக்கான வளர்ச்சியையும் பதிந்தது; இது, முன்னைய ஆண்டின்மீது 9% வளர்ச்சியைக் குறித்தது.

**நிதிப் பெறுபேறுகள்**

ஒருநோக்கில் நிதிப் பெறுபேறுகள் (ரூபா மில்லியன்)
2015 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டு

| | **2014** | **2015** |
|---|---|---|
| **முழுமொத்தக் கட்டுப்பண வருமானம்** | 194.55 | 227.5 |
| **தொழிற்பாட்டு மேன்மிகை** | 89.79 | 83.07 |
| **தேறிய உரிமைக்கோரிக்கைகள்** | 37.81 | 70.75 |
| **முதலீட்டு வருமானம்** | 100.22 | 139.20 |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | 1757.92 | 1978.15 |
| **தேறிய மேன்மிகை** | 161.69 | 174.07 |
| **வரிகளும் அறவீடுகளும்** | 28.81 | 50.43 |

கூட்டுத்தாபனத்தின் ஆண்டுக்கான தேறிய மேன்மிகை, முன்னைய ஆண்டில் 161.69 மில்லியன் ரூபாவிலிருந்து 174.07 மில்லியன் ரூபாவுக்கு அதிகரித்தது. கூட்டுத்தாபனத்தின் மொத்தச் சொத்துக்களும் ஒப்புரவும், ஆண்டின் முடிவில் முறையே ரூபா 2170.52 மில்லியனாகவும் ரூபா 1978.15 மில்லியனாகவும் இருந்தன.



**கட்டுப்பண வருமானம்**




கட்டுப்பண வீதங்கள் கட்டமைப்பு, இலாபமில்லை நட்டமில்லை நெறியின் அடிப்படையின் மீதுள்ளது. கூட்டுத்தாபனத்தின் முழுமொத்தக் கட்டுப்பண வருமானம், முன்னைய ஆண்டிலிருந்த 194.55 மில்லியன் ரூபாவிலிருந்து மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது 227.5 மில்லியன் ரூபாவுக்குப் பெருமளவில் வளர்ந்தது. எமது மையத் திட்டமாகவுள்ள விற்பனையாளரின் அபாயம், ஓராண்டுக்குமுன்னர் 151.72 மில்லியன் ரூபாவிலிருந்து 188.76 மில்லியன் ரூபாவை ஈட்டுவதற்கு ஓராண்டுக்குமுன்னர் 24.4% குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிந்தது.

**முதலீட்டு வருமானம்**




முதலீட்டுத் துறையின் குறிப்பிடத்தக்க விகிதாசாரம் அரசாங்கப் பிணையங்களில் இருந்ததென்பதுடன், அத்தகைய பிணையங்களின் வட்டிவீதங்கள் மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது குறைவான திரும்பல்களைத் தொடர்ந்து பெற்றன. எவ்வாறாயினும், முதலீட்டு வருமான அதிகரிப்பு, பகுதியளவில் முதலீட்டாதனத்துக்காக நட்டஈடு பெற்றமையின் விளைவாக இருந்தது. இதன்விளைவாக, மீளாய்வின்கீழுள்ள ஆண்டில் இது 139.20 மில்லியன் ரூபாவான முதலீட்டு வருமானத்தைப் பதிந்தது.

**வரிகளும் அறவீடுகளும்**

எதிர்காலப் பொறுப்புக்களைச் சமாளிப்பதற்கு இஏகககாகூ, அதன் ஈட்டுகைகளிலிருந்து பல ஆண்டுகளாகப் போதிய நிதியமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட போதிலும், இக்குறிக்கோளை வசதிப்படுத்தும் நோக்குடன் அந்நேரத்திலிருந்த சட்டமாக்குநர்கள் இஏகககாகூட்டுத்தாபனத்தை அரசாங்கத்துக்குப் பல்வேறு வரிகளைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்தனர். எவ்வாறாயினும், வரி அதிகாரிகள், இஏகககாகூட்டுத்தாபனத்தை ஏற்றுமதி ஆதரவளிப்பு முகவராண்மையாகக் கருதுவதில்லை. ஆகவே கூட்டுத்தாபனம் அரசாங்க வரிகளுக்குத் தொடர்ந்தும் உதவுதொகை செலுத்தியது.




மீளாய்வின்கீழுள்ள காலப்பகுதியின்போது, கூட்டுத்தாபனம், வரிகளாகவும் அறவீடுகளாகவும் 50.43 மில்லியன் ரூபாவைச் செலுத்தியது; ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இது 28.81 மில்லியன் ரூபாவாகவிருந்தது. வளர்ச்சிச் செயல்நிறைவேற்றமானது, மாண்புமிக்க நிதி அமைச்சரினாலும் மற்றும் நல்லாட்சிக் கொள்கைகள்மூலமும் எமக்களிக்கப்பட்ட ஆதரவுக்குப் புறநீங்கலாக ஏற்றிக்கூறப்படற்பாலது.

**2016 ஆம் ஆண்டுக்கான நோக்கு**

2016 ஆம் ஆண்டிலான பொருளாதார நிலைமைகள் சவாலாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் பல உருவாகிவருகின்ற சந்தைகளைத்தாக்கிய இடைஞ்சல்கள் தொடர்ந்திருக்கக்கூடும். வியாபாரப்பொருட்களின் விலைகள் குறைவானவையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது, சீனப் பொருளாதாரம் மேலும் மந்தமாகுமென எதிர்வுகூறப்படுகின்றது. உலகத்தின் பொருளாதார வாய்ப்புக்களின் பாரிய செலுத்துநர் ஐஅநாடுகளாகும். ஐஅநாடுகளின் நான்காண்டுக்கொரு தடவையான பொதுத்தேர்தல் 2016 ஆம் ஆண்டில் இடம்பெறும்; எனினும் தேர்தலின் பெறுபேறு நாட்டின் பணக்கொள்கைகளின்மீது வரையறுக்கப்பட்ட பயனை மட்டுமே கொண்டிருக்குமெனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார மீட்பு அதேபாதையில் தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றதுடன், உள்நாட்டுக் கோரிக்கையில் வலிமையான, படிப்படியான வளர்ச்சி பற்றிய சான்றுமுள்ளது. பொருளாதாரத்தின் அடிப்படைகள் அநேகமான வேறு பாரிய பொருளாதாரங்களிலும் பார்க்க நன்றாக இன்னமும் செயல்நிறைவேற்றுகின்றன என்பதுடன், ஐஅநாடுகளின் பணக்கொள்கை தொடர்ந்தும் கட்டுப்பாடுடையதாகலாம்.

இதன்விளைவாக, உருவாகிவருகின்ற சந்தைகளிடையேயான பொருளாதார வளர்ச்சி அழுத்தத்தின்கீழ் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வலிமையான உள்நாட்டுத் துனைமங்களினாலும் சீராகிவருகின்ற பாரிய பொருளாதாரக் கொள்கைகளினாலும் உதவப்பட்டு 2015 ஆம் ஆண்டிலான போக்கைப் பின்பற்றிய நாடுகள் 2016 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து செய்யலாம்.

முன்னேற்றமடைந்த சந்தைகளுக்கான நோக்கு கூடுதலாக ஒளிமயமானதாகவுள்ளது. கூடுதலான மீட்புடன் ஐரோப்பியவலயம் அதன் வளர்ச்சியைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், முன்னேற்றமடைந்த சந்தைகளுக்கு உருவாகிவருகின்ற சந்தைகளுக்கிடையேயுள்ள பலவீனமான நிலைமைகளுக்கெதிராகப் பாதுகாப்பளிக்கப்படவில்லையென்பதுடன், இது வளர்ச்சியை ஒடுக்கி முன்னேற்றமடைந்த சந்தைகளிலான மீட்பை மந்தமாக்கலாம்.

ஒட்டுமொத்தத்தில், உலகளாவிய பொருளாதாரம் 2016 ஆம் ஆண்டில் சிறிதளவு ஒளிமயமான நிலைமைகளைக் காணலாம், ஆனால் பொருளாதாரச் சூழல் சவாலுடையதாகத் தொடர்ந்திருக்கக்கூடும்; அடுத்துவருமாண்டை நோக்குகையில், வளர்ச்சியின் துரிதம் மந்தமானதாகவும் சமச்சீரற்றதாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், உலகளாவிய பொருளாதார நோக்கு ஒளிமயமற்றதாகவிருப்பதனைப் பொருட்படுத்தாது, இஏககாகூ, எதிர்நோக்கிய ஆண்டில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து திறமையாகச் செயல்நிறைவேற்றுமென எனக்கு நம்பிக்கையுண்டு.

**ஒப்புக்கொள்ளல்**

பெறுமதிவாய்ந்த எமது வாடிக்கையாளர்களும், இலங்கையின் ஏற்றுமதியாளர் சமுதாயத்தினரும், வர்த்தக வங்கிகளும் இஏககாகூட்டுத்தாபனத்தில் வைத்துள்ள நம்பிக்கைக்காகவும் நம்பகத்துக்காகவும் அவர்களுக்கு நன்றிகூற விரும்புகின்றேன். இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கான எமது முயற்சிகளில் அவர்களின் முனைப்பான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

மீளாய்வின்கீழுள்ள காலப்பகுதியின்போது, மாண்புமிக்க நிதியமைச்சர், சர்வதேச வியாபாரத்தை மேம்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகளுக்காகவும் இஏககாகூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளிலும் அபிவிருத்தியிலும் அவரது தொடர்ச்சியான அக்கறைக்காகவும் எனது அதியுச்ச நன்றியை அவருக்குத் தெரிவிக்கின்றேன். மாண்புமிக்க அரச நிதியமைச்சரின் வழிகாட்டுதலையும் ஆதரவையும் மெச்சுகின்றேன்.

மீளாய்வின்கீழுள்ள காலப்பகுதியின்போது பணிப்பாளர் சபையினால் அளிக்கப்பட்ட வழிகாட்டுதலும் ஆதரவும் பெரிதும் மெச்சப்படுகின்றது. சவாலுக்குட்பட்ட காலங்களுக்கு முகங்கொடுப்பதற்கு எமக்கு உதவுவதில் அவர்களின் அர்ப்பணிப்பு, ஈடுபாடு, வழிகாட்டுகை, நிபுணத்துவம் மற்றும் மதிநுட்பம் இத்தால் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

2010 மே 15 ஆந்திகதியிலிருந்து 2015 சனவரி 8 ஆந்திகதிவரை இஏககாகூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் முகாமைப் பணிப்பாளராகவும் அவரது பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்த எனது முன்னோடியான சனாதிபதிச் சட்டத்தரணி திரு.டீ.பீ.மென்டிஸ் அவர்களின் சேவைகள் மிகவும் மெச்சப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் பொதுநலவரசுச் செயலகத்தின் நிதியாதாரத்துடன் ஏற்றுமதிக் கடன் காப்புறுதித் தொழிலின் ஆற்றலைக் கட்டியெழுப்புதலைத் தொடக்கிவைப்பதில் அவர் காரணகர்த்தாவாக இருந்துள்ளார். ஏற்றுமதியாளர் சமுதாயத்தினருக்குச் சிறந்தமுறையில் சேவையாற்றுவதற்கு இஏககாகூட்டுத்தாபனத்தின் ஆற்றல்களைப் பலப்படுத்துவதற்கு இது அடுத்துவருமாண்டுகளிலும் தொடரப்படும். இஏககாகூட்டுத்தாபனத்தின் இடைக்காலத் தலைவராக 2015 சனவரி 13 ஆந்திகதியிலிருந்து பெப்ருவரி 18 ஆந்திகதிவரை சபையுறுப்பினர் கே.எம்.எம். சிறிவர்த்தன அவர்களினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக எனது மெச்சுதலைப் பதிய விரும்புகின்றேன்.

இஏககாகூட்டுத்தாபனத்தின் கடமைகளை நிறைவேற்றுமுகமாக எமக்களிக்கப்பட்ட ஒத்துழைப்புக்காக நிதியமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர்கள் மற்றும் வேறு அலுவலர்களுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள், வர்த்தகத் திணைக்களம் மற்றும் பல்வேறு வியாபாரப் பணிமனைகளின் உறுப்பினர்கள் அத்துடன் அலுவலர்கள் என்போர், இஏககாகூ அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் அதற்கு வழங்கிய உதவிக்காக எமது மெச்சுதலைப் பதியவும் விரும்புகின்றேன். மேலும், அக்கறைகொண்டுள்ளோர் தமது பெறுமதிவாய்ந்த நேரத்தை எக்சிம் வங்கிக் குழுவுக்குச் செலுத்தி எமது சேவைகளைச் சீராக்குவதற்கு நாம் முன்னெடுத்துச் செல்வதற்குப் பல ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்துள்ளனராதலால் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்தில் அவர்களின் ஈடுபாடு மெச்சத்தக்கதாகவுள்ளது.

இஏககாகூட்டுத்தாபனத்தினதும் இலங்கை ஏற்றுமதியாளர் சமுதாயத்தினரினதும் சார்பில், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும் குறிப்பாக வியாபார இணையாளர்களுக்கும் உலகம்பூராகவுமுள்ள கடன் சேகரிக்கும் முகவராண்மைகளுக்கும் அவர்களின் ஒத்துழைப்புக்காகவும் சர்வதேச வியாபாரத்தின் வசதிப்படுத்துகைக்காகவும் நன்றி செலுத்துகின்றோம்.

ஏற்றுமதிக் கடன் காப்புறுதித் தொழிலின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதில் பொதுநலவரசுச் செயலகத்தினால் அளிக்கப்பட்ட தொழினுட்ப ஆதரவையும் கருத்திட்டத்தின் 2 ஆம் கட்டத்துக்கும் ஆதரவளிப்பதற்கு எமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியையும் மெச்சுகின்றேன்.

கோரப்பட்டபோது எமக்கு உடனடியாக உதவியுள்ள பேர்ன் சங்கச் செயலகத்தின் அலுவலர்களுக்கும் எமது கடல்கடந்த எதிரிணையாளர்களுக்கும் ஏனைய தொழிற்பங்காளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன். ஏற்றுமதிக் கடன் காப்புறுதியின் தொழினுட்பத்துறைகளில் அவர்களின் அதிகளவில் இணைந்த அறிவும் மூலவளங்களும் இஏககாகூட்டுத்தாபனத்துக்கு வலிமைக் கோபுரமாக இருந்துள்ளது.

மேன்மையை எய்துவதற்கு முகாமைத்துவத்தினதும் பணியாட்டொகுதியினரினதும் தளர்ச்சியற்ற விசுவாசத்துக்காகவும் ஈடுபாட்டுக்காகவும் எனது ஆழ்ந்த மெச்சுதலைப் தெரிவிப்பதற்கு விரும்புகின்றேன். மூலவளங்கள் குறைவாகவிருந்தமையைப் பொருட்படுத்தாது, தேவையேற்பட்ட நேரத்தில் எமது காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்போருக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் சிறந்த சேவைகளை அளிப்பதற்குக் கடந்தாண்டின்போது அவர்கள் ஓயாது உழைத்தனர். இந்த அர்ப்பணிப்புணர்ச்சி கூட்டுத்தாபனத்தின் வெற்றியின் முக்கிய பாகமாகவுள்ளது.

ஏ.எஸ்.எம்.மிஸ்பா,
**தலைவரும் முகாமைப் பணிப்பாளரும்.**

# பணிப்பாளர் சபை

**திரு.ஏ.எஸ்.எம்.மிஸ்பா**
**தலைவரும் முகாமைப் பணிப்பாளரும்**
சட்டத்தரணி
(2015.02.18 ஆந்திகதியிலிருந்து)

**திரு.ஏ.கே.செனவிரத்ன**
மேலதிகச் செயலாளர்
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு
(2015.04.07 ஆந்திகதியிலிருந்து)

**திருமதி. அமிலா தஹாநாயக்க**
ஆளுநரின் செயலாளர்
இலங்கை மத்திய வங்கி
(2015.04.07 ஆந்திகதியிலிருந்து)

**திருவாட்டி கே.வீ.சீ.தில்ருக்ஷி**
உதவிப் பணிப்பாளர்
பகிரங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களம்
நிதியமைச்சு
(2015.04.07 முதல் 2015.10.04 வரை)

**திருமதி கே.எஸ்.தயாரத்ன**
உதவிப் பணிப்பாளர்
திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம்
நிதியமைச்சு
(2015.10.05 ஆந்திகதியிலிருந்து)

**திரு. சுரேஷ் எம்.பறணவித்தான**
பிரதான அலுவலர் – ஆயுள்
ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் கோப்பரேஷன் லிமிடெட்
(2015.11.11 ஆந்திகதியிலிருந்து)

**இரகககாகூட்டுத்தாபனத்தின் சிரேட்ட முகாமைத்துவம்**

| | |
|---|---|
| *ஏ.எஸ்.எம்.மிஸ்பா* | *தலைவரும் முகாமைப் பணிப்பாளரும்* |
| *டீ.எச்.ஜே.ரணசிங்க* | *பொது முகாமையாளர்* |
| *திருமதி.ஆர்.எம்.யூ.என்.பீரிஸ்* | *பிரதிப் பொது முகாமையாளர்* |
| *தம்மிக்க அளுத்கே* | *உதவிப் பொது முகாமையாளர்* |
| *மொஹான் சில்வா* | *உதவிப் பொது முகாமையாளர்* |
| *திருமதி. மயூரி முதலிகே* | *உதவிப் பொது முகாமையாளர்* |

## இரககாகூட்டுத்தாபனத்தின் திட்டங்களும் சேவைகளும்

விற்பனையாளரின் அபாயமும் மற்றும் வங்கிகளுக்கான கடன் உத்தரவாதங்களும் எனப் பெயரிடப்பட்ட ஏற்றுமதிக் கடன் காப்புறுதி, நாட்டிலுள்ள ஏற்றுமதியாளர் சமுதாயத்தினரின் நல்வாழ்வுக்கு இரககாகூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட சேவைகளின் முக்கிய வழங்குநராக அமைகின்றது. அதிகமான இடைஞ்சலும் வசதியீனமும் இன்றி வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெறுவதனைக் கூடுதல் இலகுவாக்குவதன்மூலம் ஏற்றுமதியாளர்களினது தொழிற்பாடுகளின் நோக்கெல்லையை அவர்கள் விசாலிப்பதனை இயலச்செய்யும் அதேவேளையில், எமது சேவைகள் அவர்களின் நிதிசார் காப்பையும் பாதுகாக்கின்றது.

### விற்பனையாளரின் அபாயம்

விற்பனையாளரின் அபாயம், ஏற்றுமதியாளர் சமுதாயத்தினருக்கான எமது திட்டங்களினதும் சேவைகளினதும் அடிப்படை மூலக்கல்லாகவுள்ளது. விற்பனையாளரின் அபாயம், வர்த்தக மட்டும் அரசியல் அபாயம் காரணமாகக் கடல்கடந்த வாங்குநரினாலான கொடுப்பனவு செய்யாமையின் அல்லது தாமதித்த கொடுப்பனவின் அபாயத்திலிருந்து ஏற்றுமதியாளரைப் பாதுகாக்கும் நோக்கத்துக்குச் சேவையளிக்கின்றது.

**வர்த்தக அபாயங்கள்**

- கடனிறுக்கவகையறவும் வங்கிமுறிவும்
- கொடுப்பனவைச் செலுத்தத்தவறுதல்
- ஒப்பந்தத்தை மறுதலித்தல்

**அரசியல் அபாயங்கள்**

- வெளிநாட்டுச் செலாவணி அனுப்புதொகையிலான தாமதங்கள்
- இறக்குமதி உரிமத்தை இரத்துச்செய்தல்
- இறக்குமதித் தடை
- கொடுப்பனவுத் தவணைநீட்டிப்பு
- போர், புரட்சி, கலவரம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள்

கூட்டுத்தாபனத்தினால் முனையப்பட்ட பரந்தளவிலான காப்புறுதிப்பத்திரங்களுள் அதன் மிக்க பிரபல்யமானது அதன் முழு மொத்தவிற்பனைவரவுக் காப்பீட்டுக் காப்புறுதிப்பத்திரங்களாகும். குறித்த துறைகளின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஏற்பாடுசெய்யப்பட்ட வசதிகளும் கிடைக்கக்கூடியனவாகவுள்ளன.

பின்வருவன ஏற்றுமதியாளர்களுக்கு முனையப்பட்ட ஏற்றுமதிக் கடன் காப்புறுதியின் வகுதிகளாகும்.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - முழு மொத்தவிற்பனைவரவும் - எல்லா வாங்குநர்களும்**

வர்த்தக அபாயத்திலிருந்தும் அரசியல் அபாயத்திலிருந்தும் ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான காப்புறுதி. இதன்கீழ் நாம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளின்மீது மொத்தக் கப்பலேற்றுகைகளைக் காப்பீடு செய்வோம்.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - குறித்த வாங்குநர்**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறித்த வாங்குநர்களின் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட வர்த்தக அபாயங்களிலிருந்து மற்றும் அரசியல் அபாயத்திலிருந்து ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான காப்புறுதி.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - குறித்த நாடு**

ஒரு குறித்த நாட்டின் வாங்குநர்களின் வர்த்தக அபாயத்திலிருந்தும் அரசியல் அபாயத்திலிருந்தும் ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான காப்புறுதி.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - அரசியல் அபாயம்**

ஒரு குறித்த நாட்டின் அரசியல் அபாயத்திலிருந்து ஏற்றுமதியாளரைப் பாதுகாப்பதற்கான காப்புறுதி.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - பூலோகரீதியிலான காப்பீடு**

இலங்கையில் கரைகடந்த ஏற்றுமதிக் கம்பெனிகளின் வாழுரிமைக்காகக் காப்புறுதி வழங்கப்படுகின்றது.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - துணைநிலை அபாயம்**

தாய்க்கம்பெனி இலங்கையில் உள்ளவிடத்து இன்னொரு நாட்டில் வாழுரிமைகொண்ட துணைநிலைக் கம்பெனியொன்றின் ஏற்றுமதியாளர்களினது அபாயத்தைக் காப்பீடுசெய்தல்.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - இறுதி வாங்குநர்களைக் காப்பீடு செய்கின்றது**

வாங்குநரின் நாட்டில் முழுமையாகச் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட துணைநிலைக் கம்பெனிக்குக் கப்பலேற்றுகைகள் செய்யப்பட்டுள்ளவிடத்து, இறுதி வாங்குநர்களின் வர்த்தக மற்றும் அரசியல் அபாயத்தைக் காப்பீடுசெய்கின்றதும் இலங்கை ஏற்றுமதியாளர்களைப் பாதுகாப்பதற்குமான காப்புறுதி.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - கையிருப்புக்களின் அனுப்புகை**

கையிருப்புக்களின் அனுப்புகைபற்றிய வர்த்தக அபாயத்தின்மீதும் அரசியல் அபாயத்தின்மீதும் இலங்கை ஏற்றுமதியாளரைக் காப்பீடுசெய்தல்.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - களஞ்சிய வியாபாரம்**

களஞ்சிய வியாபாரத்திலிருந்து எழுகின்ற இலங்கை ஏற்றுமதியாளரொருவரின் வர்த்தக அபாயத்தையும் அரசியல் அபாயத்தையும் காப்பீடுசெய்தல்.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - விற்பனையாளரின் அபாய எல்லாமடங்கிய சேவைக் காப்புறுதிப்பத்திரம்**

வர்த்தக அபாயத்திலிருந்தும் அரசியல் அபாயத்திலிருந்தும் சேவைத்துறை ஏற்றுமதியாளர்களைப் பாதுகாப்பதற்கான காப்புறுதி.

**விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் - உள்நாட்டுக் கடன் காப்புறுதி**

காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவர் இலங்கையிலுள்ள அவரின் வாங்குநர்களுக்குப் பண்டங்களை அனுப்புவதுடனும் சேவைகளை அளிப்பதுடனும் இணைந்த வர்த்தக அபாயத்திலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கான காப்புறுதி.

**வங்கிகளுக்கு முனையப்பட்ட ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்கள்**

ஏற்றுமதியாளர்களின் நீண்டகாலத் தவணைதவறுகையும் கடனிறுக்கவகையறவும் காரணமாக ஏற்றுமதியாளரினால் முற்பணங்கள் செலுத்தப்படாமையின் விளைவாக வங்கிகளினால் உறப்பட்ட நட்டங்களை வங்கிகளுக்கான கடன் உத்தரவாதங்கள் தணிக்கின்றன. வங்கிகளுக்கான எமது கடன் உத்தரவாதங்கள், இணையுறுக்களையும் பெருந்தொகைகளுக்கான வைப்புக்களையும் இடுவதற்கான அவசியத்தை அகற்றுவதன்மூலம் ஏற்றுமதியாளர்களின் நிதிசார் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கின்றன. ஏற்றுமதியாளர்களின் கடனிறுக்கவகையறவினால் அல்லது அவர்களின்பாலான நீண்டகாலத் தவணைதவறுகையினால் விளைவிக்கப்பட்ட, வங்கிகளினால் உறப்பட்ட நட்டங்களின் 66.66 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையானதை மீளளிப்பதற்கு இஏகசாகூ பொறுப்பேற்கின்றது.

பின்வருவன வங்கிகளுக்கு முனையப்பட்ட ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்களின் வகுதிகளாகும்.

**கப்பலேற்றுகைக்கு முன்னரான கடன் உத்தரவாதங்கள் (தனியாள்)**

தனிப்பட்ட எதிரிணையாளர் அபாயத்தை ரூபாக்களிலும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களிலும் 66.66 சதவீதம்வரை காப்பீடுசெய்ய முடியும். மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் பண்டங்களைச் செய்முறைப்படுத்துதலும் ஏற்றுமதிகளைப் பொதியிடுதலும் என்பவற்றுக்கான கடன்பத்திரங்கள் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளுக்கெதிராக ஏற்றுமதியாளர்களுக்குக் கப்பலேற்றுகைக்குமுன்னரான வசதிகளை வழங்குவதற்கு இவ்வுத்தரவாதங்கள் நிதிநிறுவனங்களுக்கு வசதியளிக்கின்றன.

**கப்பலேற்றுகைக்குப்பின்னரான கடன் உத்தரவாதங்கள் (தனியாள்)**

இவ்வுத்தரவாதங்கள் வர்த்தக வங்கிகளுக்கு முனையப்படுகின்றன. ஏற்றுமதிப் பட்டியல்களின் கொள்வனவு, அவைபற்றிய பேச்சுவார்த்தை அல்லது அவற்றின் கழிப்பனவு என்றவகையாகக் கப்பலேற்றுகைக்குப்பின்னரான கட்டத்தில் அவற்றின் தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கென நிதிபெறுவதற்கு வங்கிகளை அணுகமுடியுமென்பதனை இவ்வுத்தரவாதங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**கப்பலேற்றுகைக்கு முன்னரான/பின்னரான முழு மொத்தவிற்பனைவரவுக் கடன் உத்தரவாதங்கள்**

உயர்வான காப்பீட்டிலும் குறைவான கட்டுப்பண வீதத்திலும் ஏற்றுமதியாளருக்கு அல்லது நேரடியற்ற ஏற்றுமதியாளருக்குக் கப்பலேற்றுகைக்குமுன்னரான/பின்னரான முற்பணங்களாக வழங்கப்பட்ட முழுக் கடன்துறையையும் காப்பீடுசெய்வதற்கு இவ்வுத்தரவாதங்கள் வங்கிகளுக்கு வசதியளிக்கின்றன.

**ஏற்றுமதி உற்பத்திக் கடன் உத்தரவாதங்கள்**

இணையுறுக்கள்மீது பெருமளவு அழுத்தமின்றி ஏற்றுமதியாளர்களுக்காகப் பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்திசெய்வதற்குத் தயாரிப்பாளர்களுக்குத் தொழிற்பாட்டு மூலதனத்துக்கு நிதியளிப்பதற்கு இத்திட்டம் நிறுநிறுவனங்களுக்கு வசதியளிக்கின்றது.

**ஏற்றுமதிச் செயல்நிறைவேற்ற உத்தரவாதங்கள்**

இது, இலங்கையிலிருந்து பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதிசெய்வதற்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை முறையாக நிறைவேற்றுவதற்கு உத்தரவாதமளித்து கடல்கடந்த வாங்குநர்களுக்கு அல்லது அரசாங்க அதிகாரிகளுக்கு வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்களின்சார்பில் அவர்கள் வழங்குகின்ற உத்தரவாதங்களுக்கும் முறிகளுக்கும் எதிராக அவற்றுக்கு வழங்கப்பட்ட எதிர் உத்தரவாதமொன்றாகவுள்ளது.

நிர்மாணவேலையினூடான அடிமட்ட நிறைவேற்றுகை ஏற்றுமதி ஒப்பந்தங்களையும் பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதிசெய்தலையும் இத்துறைகள் உள்ளடக்குகின்றன.

**கப்பற்பொருள் அனுப்புநர்களின் முறையான செயல்நிறைவேற்றுகையைக் காப்பீடுசெய்கின்ற ஏற்றுமதிச் செயல்நிறைவேற்றுகைக் கடன் உத்தரவாதம்**

ஒரு கப்பற்பொருள் அனுப்புநருக்குக் கடன்வசதிகளை அளிக்கின்ற வானூர்திச்சேவைக்கு வங்கி உத்தரவாதத்தை வங்கியானது வழங்குகின்றமைக்குப் பிரதிபயனாக, இவ்வுத்தரவாதம் வங்கியொன்றுக்கு வழங்கப்பட்ட எதிர் உத்தரவாதமாகும்.

**ATA கார்னெட் முறைமையைக் காப்பீடுசெய்கின்ற ஏற்றுமதிச் செயல்நிறைவேற்றுகை உத்தரவாதங்கள்**

சர்வதேச வர்த்தகப் பணிமனை (ICC) - இலங்கை என்பதிலிருந்து ATA கார்னெட் ஆவணங்களை ஏற்றுமதியாளர்கள் பெறுவதற்கு இவ்வுத்தரவாதங்கள் ICC - இலங்கை என்பதற்கு வழங்கப்படுகின்றன. ATA கார்னெட் என்பது, குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு, குறித்த நோக்கத்துக்காக, வெளிநாட்டுப் பண்டங்களின் தீர்வையற்ற தற்காலிக இறக்குமதியை அனுமதிக்கின்ற சர்வதேசச் சுங்க ஆவணமாகும்.

**"APARA" தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையருக்குப் பயணச்செலவு முற்பணங்களைக் காப்பீடுசெய்கின்ற முழு மொத்தவிற்பனைவரவு வங்கி உத்தரவாதம்**

தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையருக்கு வழங்கப்பட்ட புறப்படுவதற்கு முன்னரான முழுக் கடன்களினதும்மீது வங்கிகளுக்கான காப்பீட்டை இவ்வுத்தரவாதத்திட்டம் வழங்குகின்றது.

**ஏனைய சேவைகள்**

**BiZinfo – கடன் மற்றும் நிதிசார் தகவல்கள்**

இத்திட்டம், வங்கித்தொழிற்றுறைக்கு இலங்கை ஏற்றுமதியாளர்களினதும் இறக்குமதியாளர்களினதும் கடல்கடந்த வாடிக்கையாளர்கள் பற்றிய கடன் மற்றும் நிலைமை அறிக்கைகளை வழங்குகின்றது. இஏககாகூ, உலகம்பூராகவுமுள்ள முதல்வர்களின் வலையமைப்பிலிருந்து கடன் மற்றும் அந்தஸ்து அறிக்கைகளின் வழங்குநராகப் பணியாற்றுகின்றது.

**எல்லைகளுக்கிடையேயான கடன் சேகரிப்புச் சேவை**

ஏற்றுமதியாளர்களின்சார்பில் சேகரிக்கப்படாத கடன்களை அறவிடும் நடைமுறையைப் பொறுப்பேற்பதற்கு இஏககாகூ, ஓர் உலகளாவிய கடன் சேகரிப்பு முகவராண்மைகளைக்கொண்ட குழுவுடன் பங்காண்மையொன்றைச் செய்துகொண்டுள்ளது. அறவீட்டு மதிப்பீட்டுச் சேவையொன்றும் பெறப்படற்பாலதான முகாமைத்துவம்பற்றிய மதியுரையும் இஏககாகூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுகின்றது.

## ஏற்றுமதிக் கடன் காப்புறுதி

எல்லைகளுக்கிடையேயான வியாபாரத்தில் தணிப்புக்கருவியொன்றாகக் கடன் காப்புறுதியின் பெறுமதி, பூலோகரீதியிலான அங்கீகாரத்தில் மேம்பாடடைந்துள்ளது; திட்டத்தின் அதிகரித்த கோரிக்கைக்கு இது இட்டுச்சென்றுள்ளது.

குறுகியகாலத்தொழிலில், காப்பீடுசெய்யப்பட்ட ஏற்றுமதிகள், கடன் காப்புறுதிப்பத்திரமொன்றின்கீழ் காப்பீடுசெய்யப்படுகையில் மொத்தவிற்பனைவரவை அல்லது செய்யப்பட்ட கப்பலேற்றுகைகளின் பெறுமதியைக் குறிக்கின்றன. காப்பீடுசெய்யப்பட்ட ஏற்றுமதிகள், வழங்கப்பட்ட கடன் எல்லைகளை ஒத்திருப்பதில்லை. மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது, இஏககாகூ, அதன் ஏற்றுமதிக் கடன் காப்புறுதியினூடாக இருபத்தைந்து மில்லியன் ரூபாப் பெறுமதிக்கு மேற்பட்ட ஏற்றுமதிகளை ஆதரித்து, எல்லா வகையினருமான ஏற்றுமதியாளர்களையும் ஆதாரப்படுத்தியது.

**காப்புறுதிசெய்யப்பட்ட தொழில்**

2015 சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம்வரையான காலப்பகுதிக்கு 27.77 பில்லியன் ரூபாவை அடைந்து, மொத்தக் காப்புறுதிசெய்யப்பட்ட தொழில், 9 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் நேரொத்த காலப்பகுதியில் இது 25.5 பில்லியன் ரூபாவாகவிருந்தது.



கீழேயுள்ள படம், 2015 சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியின்போது இஏககாகூட்டுத்தாபனத்தின் காப்புறுதிசெய்யப்பட்ட தொழிலின் வளர்ச்சியைக் காட்டுகின்றது.




**பாரிய சந்தைகள்**

2015 ஆம் ஆண்டின்போது ஐக்கிய அரபு இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய இராச்சியம், ஈரான் மற்றும் ரூசியா என்பன, இஏககாகூட்டுத்தாபனத்தின் வெளிக்காட்டுகையின் கணிசமானளவினதான பங்கைக் கொண்டிருந்தன; இது, 2015 ஆம் ஆண்டின் மொத்தக் காப்புறுதி செய்யப்பட்ட தொழிலின் 47 சதவீதமாகும்.

ஐக்கிய அரபு இராச்சியம் மிகப்பெரிய காப்புறுதிசெய்யப்பட்ட சந்தையாகவிருந்தது; 2015 ஆம் ஆண்டில் இது இஏககாகூட்டுத்தாபனத்தின் மொத்தக் காப்புறுதிசெய்யப்பட்ட தொழிலின் 18 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் 5 பில்லியன் ரூபாவை அடைந்து 39% வளர்ச்சியையும் பதிந்தது.

மொத்தக் காப்புறுதிசெய்யப்பட்ட தொழிலின் 12 சதவீதத்தை அளித்து ஐஅநாடுகள் இஏககாகூட்டுத்தாபனத்தின் காப்புறுதிசெய்யப்பட்ட தொழிலின் இரண்டாவது மிகப்பெரிய சந்தையாகவிருந்தது. ஐக்கிய இராச்சியமும் ஈரானும் ஆகிய நாடுகள் ஒவ்வொன்றும் 6% பங்கை வைத்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 1% மற்றும் 26% என்ற வீதத்திலும் வளர்ந்தன. 2015 ஆம் ஆண்டில் ரூசியா இஏககாகூட்டுத்தாபனத்தின் மொத்தக் காப்புறுதிசெய்யப்பட்ட தொழிலின் 5 சதவீதத்தை வைத்திருந்தது.

4% பங்கை வைத்திருந்து அவுஸ்ரேலியா 10 உச்சச் சந்தைகளிடையே இருந்தது, ஆனால் யப்பான், ஜேர்மனி, சவூதி அரேபியா மற்றும் பிரான்சு முறையே 4%, 4%, 4% மற்றும் 3% என்பவற்றை வைத்திருந்தன. சவூதி அரேபியாவினதும் யப்பானினதும் காப்புறுதிசெய்யப்பட்ட தொழிலானது, தேயிலை, இறப்பர் கையுறைகள், கயிற்றுத்தும்பு மற்றும் இறப்பர் தொடர்பான உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதியிலான அதிகரிப்புக்காரணமாகக் குறிப்பிடத்தக்கமுறையில் அதிகரித்தது.

**முக்கிய சந்தைகளின் காப்புறுதிசெய்யப்பட்ட தொழில் 2015**

| நாடு | மொத்தக் காப்புறுதி செய்யப்பட்ட தொழில் - 2015 (ரூபா) | 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுமதியிலான % மாற்றம் |
|---|---|---|
| ஐஅஇராச்சியம் | 5,085,419,052 | 39% |
| ஐஅநாடுகள் | 3,470,851,065 | 10% |
| ஐஇராச்சியம் | 1,689,482,165 | 1% |
| ஈரான் | 1,550,138,948 | 26% |
| ருசியா | 1,271,777,460 | -23% |
| அவுஸ்திரேலியா | 1,175,856,618 | -8% |
| யப்பான் | 1,077,113,171 | 114% |
| ஜேர்மனி | 1,070,558,696 | -4% |
| சவூதி அரேபியா | 1,023,496,355 | 386% |
| பிரான்சு | 841,567,190 | -9% |




**இஏககாகூட்டுத்தாபனத்தின் காப்பீடு**

இலங்கை ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்குப் பிராந்தியத்திலான திட்டவட்டமின்மைகளைப் பொருட்படுத்தாது, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகள் உட்பட, "விற்பனையாளரின் அபாயக் காப்புறுதித்திட்டத்தின்"கீழ் இஏககாகூ, தற்போது 160 நாடுகளின் அரசியல் அபாயத்தைக் காப்பீடுசெய்கின்றது.

2015 ஆம் ஆண்டளவில் 8 பிராந்தியங்களுக்கிடையேயான காப்பீட்டின் பகிர்வு விளக்கப்படத்திற் காட்டப்பட்டுள்ளது.

இஏககாகூ, நாட்டு அபாயத் தோற்றங்களைக் காலத்துக்குக்காலம் மீளாய்வதுடன், குறிப்பிட்டவொரு சந்தைக்கு இலங்கை ஏற்றுமதிகள் அதிகரித்து குறித்தவொரு கட்டளைக்கல்லுக்கு மேற்படவிருப்பின், இஏககாகூ அத்தகைய நாடுகளுக்கான அதன் காப்புறுதிக் காப்பீட்டைத் தொடங்குகின்றது.

**கடன் எல்லைகள்**

ஒப்புறுதியீடானது, காப்புறுதி அபாய மதிப்பீட்டின் எல்லாமடங்கிய முறைமையொன்றாகவுள்ளது; இது, அபாய மட்டத்தை மதிப்பீடு செய்தலையும் காப்புறுதிக் காப்பீட்டின் அளவையும் நிபந்தனைகளையும் வரையறுத்துக்கூறுதலையும் உள்ளடக்கும். ஒப்புறுதியீட்டின் நோக்கம், முகவராண்மையின் ஒப்புறுதியீட்டுக் கொள்கைக்கிணங்க, அபாயங்களையும் அவற்றுக்கெதிராகக் காப்புறுதிசெய்வதற்கான இயலுமானதன்மையையும் (மற்றும் எந்நிபந்தனைகளின்கீழ் என்பதையும்) இனங்காணுதலாகும்.

காப்புறுதிசெய்யப்பட்ட திறத்தவரின் மற்றும் ஒரு குறிப்பிட்ட கருத்திட்டத்தின் நியதிகளின்படி, அபாய மட்டத்தை இனங்காணுவதற்கென ஒப்புறுதியீட்டு வேலையை நிறைவேற்றுகையில் பரந்தளவிலான தகவல் மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதன்மூலமும், வாங்குநர்களுக்கும் நாடுகளுக்குமான ஒப்புறுதியீட்டின்மூலமும், கடன்பெறுதகு வாங்குநர்களின்மீது கடன் எல்லைகளை வழங்குவதன்மூலமும் கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளர்களுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தது.

கடன் எல்லைகள், காப்புறுதிசெய்வதற்குக் காப்புறுதியாளரொருவர் பொறுப்பேற்றுள்ள தொகைகளைக் குறிக்கின்றன. இவை, பல்வேறு காரணிகளினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டவையும், காப்புறுதியாளரினால் நிர்ணயிக்கப்பட்டவையும், வாங்குநர்கள் மீதானவையுமான கடன் எல்லைகளாகவுள்ளன.

**ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்கள்**

இஏககாகூட்டுத்தாபனத்தின் ஏற்றுமதிக் கடன் உத்தரவாதங்கள், ஏற்றுமதியாளர்களுக்கான நிதிகளின் உள்ளபடியான வழங்குகையை உட்படுத்துவனவல்ல. இது, ஏற்றுமதியாளர்களுக்கு நிதியளிப்பதிலிருந்து விளைகின்ற நட்டங்களுக்கெதிராக ஏற்றுமதி நிதியளித்தல் வங்கிகளைப் பாதுகாப்பதற்காகும். நிதிநிறுவனங்களுக்கு அவசியமான ஆதரவை வழங்குவதன்மூலம் ஏற்றுமதித்துறைக்கு கூடுதல்முனைப்பானமுறையில் நிதியளிப்பதில் பங்குபற்றுவதற்கு அவை அதன்மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டிற்போன்று, கப்பலேற்றுகைக்குமுன்னரான கடன் உத்தரவாதத்திட்டம் வங்கிகளுக்கிடையே மிக்க பிரபல்யமான உத்தரவாதமாகத் தொடர்கின்றது.

**ATA கார்னெட் முறைமை**

ATA கார்னெட் என்பது, பண்டங்களின் தீர்வையற்ற மற்றும் வரியற்ற தற்காலிக இறக்குமதியை அனுமதிக்கின்ற சர்வதேசச் சுங்க ஆவணம் ஒன்றாகுமென்பதுடன், வர்த்தக மாதிரிகளை, வியாபார முறைச்சந்தைகள், கண்காட்சிகள் மற்றும் வியாபார ஊக்குவிப்பு

நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதற்குப் பயனுற ஏற்றுமதிசெய்யவும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குத் தீர்வையின்றி இறக்குமதிசெய்யவும் முடியும்.

ATA கார்னெட் காப்பீடு, வர்த்தக மாதிரிகள், உயர்தொழிற்சார் சாதனங்கள் மற்றும் வியாபார முறைச்சந்தைகள், நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் இவைபோன்றவற்றில் முன்வைத்தல்களுக்கான அல்லது பயன்பாட்டுக்கான பண்டங்களைக் காப்பீடுசெய்கின்றது. ஏற்றுமதியாளரொருவர் வியாபார முறைச்சந்தைகளுக்காக வர்த்தக மாதிரிகளுடனும் காட்சிப்பொருட்களுடனும் எல்லைகளுக்கப்பால் செல்ல விரும்பினால், ATA கார்னெட், சுங்க விடுவிப்பிலான அவரது அல்லது அவளது நேரத்தைக் குறைத்து பயணத்தைத் துரிதமாக்கும்.

**ATA கார்னெட்டின் பயன்படுத்துநர்**

ATA கார்னெட்டின் பயன்படுத்துநர் தனியாளொருவராக அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பெனியொன்றாக இருக்கலாம்.

- பயணிக்கின்ற தொழில்/ விற்பனை நிறைவேற்றலுவலர்கள்

- தொழினுட்பவலர்கள்

- முறைச்சந்தைக் கண்காட்சியாளர்கள், உயர்தொழிற்சார் தனியாட்கள் மற்றும் திரைப்படக் குழுவினர், அறுவை மருத்துவர்கள், சித்திரம்வரைவோர், கட்டிடக்கலைஞர்கள், பொறியியலாளர்கள், கல்வித்துறைசார்ந்தோர், களியாட்டக்காரர்கள் முதலியவர்கள் போன்ற குழுவினர்கள்.

- கார்னெட்டானது வேறெவரேனுமாளினால் பயன்படுத்தப்படவிருப்பின், அவர் அதிகாரக் கடிதமொன்றை வைத்திருந்தாலொழிய, அவரது சார்பில் கார்னெட் வைத்திருப்பவரிடமிருந்தான கடிதமொன்றைக் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

இணையுறு பிணைப்பொறுப்பின்றி ATA கார்னெட் சுங்க ஆவணத்தைப் பெறுவதற்கு ஏற்றுமதியாளர்களை, விசேடமாக இரத்தினக்கல் மற்றும் நகைத்துறையை இயலச்செய்து, கூட்டுத்தாபனம், சர்வதேச வர்த்தகப் பணிமனை - இலங்கை (சவப - இலங்கை) என்பதற்கு ATA கார்னெட் முறைமையைக் காப்பீடுசெய்கின்ற நேரடி ஏற்றுமதிச் செயல்நிறைவேற்ற உத்தரவாதத்தைத் தொடர்ந்து வழங்கியது.

இந்தச் சுங்க ஆவணம், ஏற்றுமதியாளர்களை, விசேடமாக இரத்தினக்கல் மற்றும் நகைத்துறையை, வியாபார முறைச்சந்தைகளிலும் கண்காட்சிகளிலும் பங்குபற்றி இலாபங்களை ஆகக்கூடியனவாக்குவதற்கு ஏற்றுமதி ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு இயலச் செய்கின்றது.

மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது, கூட்டுத்தாபனம், ஆண்டின்போது 25.97 மில்லியன் ரூபாப் பெறுமதிக்கு சவப - இலங்கை என்பதற்குக் கோரிக்கை உத்தரவாதங்களை வழங்கியுள்ளது.

**பயணச் செலவு – APARA**

இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகைகளின் குறிப்பிடத்தக்கவொரு பாகம், தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையரினால் உதவப்படுவதனால், சேவைகளின் ஏற்றுமதி அதிமுக்கியவொரு துறையாகவுள்ளது.

வெளிநாடுசெல்லும் வேலையாளர்களின் வான்பயணச்செலவும் தொடர்புபட்ட செலவுகளும் தொடர்பாக அவர்களினால் முகங்கொடுக்கப்படும் ஒருசிலக் கட்டுப்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கும் இத்துறைக்கு வசதிகளை அளிப்பதில் வங்கிக்கான அபாயத்தைப் பொறுப்பதற்கும் எமது உத்தரவாதத்திட்டம் உட்கருதுகின்றது.

வெளிநாடு செல்லும் வேலையாளர்களின் வான்பயணச்சீட்டின் செலவை மட்டுமே காப்பீடுசெய்வதற்கு 1992 மே மாதத்தில் இஏககாகூ இவ்வங்கி உத்தரவாதத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதுடன், உத்தரவாதமளிக்கப்பட்ட நட்டத்தின் 60 சதவீதக் காப்பீட்டுடன் தொழிற்பட்டது.

திட்டமானது காலத்துக்குக்காலம் திரிபுபடுத்தப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட நட்டத்தின் 85 சதவீதத்தினதான உயர்வான காப்பீட்டுடன் புறப்படுதலுக்குமுன்னரான முழுக் கடனையும் இப்போது காப்பீடுசெய்கின்றது.

APARA திட்டமானது, நாட்டின் உயர்அவாவுள்ள மற்றும் முன்னோக்குள்ள பிரசைகள் வெளிநாடுகளில் தொழில்பெற்று வறுமையிலிருந்து தம்மை விடுவிப்பதற்கு அவர்களை இயலச்செய்கின்றது. இந்த இலட்சியத்தைக்கொண்ட இலங்கையர் தமது வாழ்க்கைத் தராதரத்தைச் சீராக்கி, அனுப்புதொகைகளை அதிகரிப்பதன்மூலமும் வெளிநாட்டு ஒதுக்குகளை மேம்படுத்துவதன்மூலமும் பொருளாதாரத்தின் நலனைப் பாதுகாக்குமுகமாக உதவுவதற்கு இஏககாகூ அவர்களுக்குத் துணைபுரிவதற்கு விரும்புகின்றது.

மீளாய்வின்கீழுள்ள காலப்பகுதியின்போது, நிதிநிறுவனங்களிடமிருந்து 156.08 மில்லியன் ரூபாப் பெறுமதிக்கான வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு இஏககாகூ, 894 விண்ணப்பகாரர்களுக்கு உதவியதுடன், நாட்டிலுள்ள எல்லாப் பாகங்களிலுமிருந்தான பல இலங்கையர் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும் வசதியளித்தது.

**சர்வதேசத் தொடர்புகள்**

உலகமயமாக்கலின் நோக்கில், பொருளாதாரத் தொகுதிகளின் வியாபார வடிவமைப்புகள் அவற்றின் எதிரிணையாளர்களின் துனைம, பரஸ்பரச் செல்வாக்கின்கீழுள்ளது. சர்வதேசச் சந்தை மாற்றங்களைச் சமாளிப்பதற்கு, கூட்டுத்தாபனம், உள்நாட்டு விபாயாரக் கழகங்கள்

மற்றும் கடல்கடந்த ஏற்றுமதிக் கடன் முகவராண்மைகள் (ஏகமுகவராண்மைகள்) என்பவற்றுக்கிடையேயான பரிமாற்றமும் ஒத்துழைப்பும் வளர்ந்துள்ளதுடன், இணைப்புக்களையும் தொடர்பாடல்களையும் பலப்படுத்தி, ஏற்றுமதியாளர்கள் நாட்டு மற்றும் வாங்குநர் அபாயங்களுக்கு முகங்கொடுப்பதற்கும் உதவியுமுள்ளன.

**கடன் மற்றும் முதலீட்டுக் காப்புறுதியாளர்களின் சர்வதேசச் சங்கம்**

கூட்டுத்தாபனமானது ஏற்றுமதிக் கடன் மற்றும் முதலீட்டுக் காப்புறுதித்தொழிலுக்கான தலையாய சர்வதேசக் கழகமாகவுள்ள கடன் மற்றும் முதலீட்டுக் காப்புறுதியாளர்களின் சர்வதேசச் சங்கத்தின் (பேர்ன் சங்கம்) உறுப்பினராகவுள்ளது.

உறுப்பினர்கள், உலகளாவிய அபாயமுகாமைத் தீர்வுகளை முனைகின்ற தனியார் கம்பெனிகளாகவும், தேசிய ஏற்றுமதிகளுக்கும் வெளிப்புற முதலீடுகளுக்கும் ஆதரவளிப்பதனை நோக்காகக் கொண்ட அரசினால் ஆதரிக்கப்பட்ட ஏற்றுமதிக் கடன் முகவராண்மைகளாகவும் உள்ளன.

நாட்டின் ஏற்றுமதிகளை அபிவிருத்திசெய்வதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவுமான பணிப்பாணையுடன் இலங்கையில் தொழிற்படுகின்ற அரசாங்கத்தின் தனி ஏற்றுமதிக் கடன் முகவராண்மையாகவுள்ள (ஏகமு) இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இஏககாகூ), ஏற்றுமதிக் கடன் காப்புறுதி மற்றும் முதலீடு பற்றிய மிக்க அண்மையிலான அபிவிருத்திகளுக்கும் மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் அணுகுதலைப் பெறும் நோக்குடன், 1983 ஆம் ஆண்டில் பேர்ன் சங்கத்தின் முழுமையான உறுப்பாண்மையைப் பெற்றுள்ளது. கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள், முறையே இத்தாலியிலும் சீனாவிலும் நடைபெற்ற பேர்ன் சங்கக் குழுக் கூட்டத்திற்கும் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கும் சென்றனர்.

**பிராந்திய ஒத்துழைப்புத் தொகுதி (பிஒதொ)**

பிராந்திய ஒத்துழைப்புத் தொகுதி (பிஒதொ), ஆசியப் பிராந்தியத்தில் உறுப்பினர்களிடையே சர்வதேசத் தொடர்புகளை அபிவிருத்திசெய்வதற்கு 1991 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பேர்ன் சங்கத்தின் 12 உறுப்பினர் நிறுவனங்களைக்கொண்ட தொகுதியாகவுள்ளது.

பேர்ன் சங்கத்தின் பிராந்திய ஒத்துழைப்புத் தொகுதி (பிஒதொ), அவுஸ்ரேலியா, இந்தியா, சீனா, இந்தோனீஷியா, யப்பான், மலேஷியா, சிங்கப்பூர், இலங்கை, தென் கொரியா, தாய்வான், தாய்லாந்து மற்றும் ஹொங்கொங் என்பவற்றிலிருந்தான ஆசிய ஏற்றுமதிக் கடன் முகவராண்மைகளைக் கொண்டுள்ளது.

பேர்ன் சங்கக் கூட்டங்களுடன் ஒரேநேரத்தில் நடாத்தப்பட்ட பிஒதொகுதிக் கூட்டங்களில் பங்குபற்றியமையைத்தவிர, ஒவ்வோராண்டும் நடைபெற்ற பிநிஅலுவலர்கள் கூட்டங்களுக்கும் பிரதிநிதிகள் சென்றனர். இக்கூட்டங்களில், உறுப்பினர்கள், கடன் காப்புறுதிச் சந்தை தொடர்பான முக்கிய நடப்பு பூலோகரீதியிலான பிரச்சினைகள்பற்றிக் கருத்துக்களைப் பரிமாற்றி,

அவர்கள் பொது அக்கறைகொண்டுள்ள விடயங்கள்மீது நிபுணத்துவ மதியுரையைப் பகிர்ந்தனர்.

**ஆசியக் கடன் குறைநிரப்பு நிறுவனக் கூட்டமைப்பு (ஆககுநிகூ)**

ஆசியக் கடன் குறைநிரப்பு நிறுவனக் கூட்டமைப்பு (ஆககுநிகூ) 1987 ஆம் ஆண்டிலிருந்து சிறிய மற்றும் நடுத்தர அளவினவான தொழில்முயற்சிகளுக்காக (சிநதொழில்முயற்சிகள்) மிகப்பெரிய ஆசிய ஒத்துழைப்புக் குழுவாக இருந்துள்ளது. தற்போது 16 உறுப்பினர் நிறுவனங்களுடன் 11 நாடுகள் உள்ளன. ஆககுநிகூட்டமைப்பின் குறிக்கோளானது, ஆசியாவிலுள்ள சிறிய தொழில் கடன் குறைநிரப்பு நிறுவனங்களிடையே தகவற் பரிமாற்றம், கலந்துரையாடல்கள் மற்றும் ஆளணியினரின் இடைப் பரிமாற்றம் என்பவற்றினூடாக ஆசியப் பிராந்தியத்தில் சிநதொழில்முயற்சிகளுக்கான கடன் குறைநிரப்பு முறைமைகளின் திடமான அபிவிருத்தியை ஊக்குவிப்பதாகும். தற்போது, இஏககாகூ, அவதானிப்பாளர் அந்தஸ்திலுள்ளதுடன் இவ்வொழுங்கமைப்புக்கான எமது விண்ணப்பம் 2016 ஆம் ஆண்டில் கவனத்துட்கொள்ளவும்படும். தலைவரும் முகாமைப் பணிப்பாளருமான திரு.ஏ.எஸ்.எம்.மிஸ்பா அவர்களும் பிரதிப் பொது முகாமையாளர், தொழிற்பாடுகள், திருமதி.ஆர்.எம்.யூ.என்.பீரிஸ் அவர்களும் இந்தோனீஷியாவில் நடைபெற்ற இவ்வாண்டின் பிரதானப் பேராளர்கள் கூட்டத்தில் பிரதிநிதித்துவம் வகித்தனர்.

**ஆசிய எக்சிம் வங்கியின் அரங்குடன் இணைதல்**

| ஆண்டின்போது கைமாற்றப்பட்டது | | | | 136,685.61 | 2,431,938.16 | 12,243,223.15 | 14,811,846.92 |
| 2014 திசெம்பர் 31 அன்றுள்ளவாறான மீதி | 1,540,640,975.06 | 36,940,386.35 | 58,507,949.05 | 54,803,859.53 | 6,644,192.04 | 30,391,207.86 | 1,727,928,569.89 |
| மீள்பெறுமானமதிப்பீட்டு ஒதுக்கிலிருந்து கைமாற்றப்பட்டது | 4,750,000.00 | -4,750,000.00 | | | | | 0.00 |
| 2015 ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | 174,076,131.18 | | | | | | 174,076,131.18 |
| 2015 ஆம் ஆண்டின்போது கைமாற்றப்பட்டது | 6,644,192.04 | | | 47,861,159.85 | -6,644,192.04 | -1,712,707.76 | 46,148,452.09 |
| 2015 திசெம்பர் 31 அன்றுள்ளவாறான மீதி | 1,726,111,298.28 | 32,190,386.35 | 58,507,949.05 | 102,665,019.38 | 0.00 | 28,678,500.10 | 1,948,153,153.16 |

தொழினுட்ப மாற்றீட்டு ஒதுக்கு: 2015 சனவரி 1 ஆந்திகதியிலிருந்து இந்த ஒதுக்கை நிறுத்திவிடுவதற்கும் உளதாயுள்ள மீதியைப் பொதுவான ஒதுக்குக்குக் கைமாற்றுவதற்கும் சபை முடிபுசெய்துள்ளது.

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இஏககாகூ)

## குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

### பொதுவான தகவல்கள்

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுடன், 1979 ஆம் ஆண்டு பெப்ருவரி 8 ஆந்திகதியன்று வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்கியது.

### குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்பற்றிய சுருக்கம்

இந்நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 01. தயாரிப்பின் அடிப்படை

### 1.1 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள், ஏற்றுமதி வியாபாரத்தில் அபாயங்களைப் பொறுப்பேற்றலும் ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட உத்தரவாதங்களை வழங்குதலுமாகும்.

### 1.2 அளவீட்டு அடிப்படை

2014 திசெம்பர் 31 அன்றுள்ளவாறும் முடிவடைந்த ஆண்டுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகை, வருமான, செலவினக் கணக்கு, ஒப்புரவிலான மாற்றங்கள், பண ஓட்டங்கள் என்பன, கணக்கீட்டுக் கொள்கைகளுடனும் குறிப்புக்களுடனும் சேர்த்து (நிதிசார் கூற்று), இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுகுகின்றன. இந்நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாக்களில் முன்வைக்கப்படுகின்றன. நிதிசார் கூற்றுக்கள் வரலாற்றுமுறையான செலவு அடிப்படையின்மீது தயாரிக்கப்படுவதுடன், நிதிசார் கூற்றுக்களைப் பாதிக்கின்ற பணவீக்கஞ்சார் காரணிகளுக்கான சீர்ப்படுத்துதல்களின்றி தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### 1.3 மதிப்பீடுகளையும் தீர்ப்புக்களையும் பயன்படுத்துதல்

நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல், கொள்கைகளினதும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும், வருமானத்தினதும் செலவுகளினதும் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் பயன்பாட்டுடன் தொடர்புபட்ட தீர்ப்புக்களையும், மதிப்பீடுகளையும், ஊகங்களையும் செய்வதற்கு முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்துகின்ற இகநியமங்களுடன் (இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்) இசைந்தொழுகுகின்றது. மதிப்பீடுகளும் இணைந்த ஊகங்களும் வரலாற்றுமுறையான அனுபவத்தினதும், சூழ்நிலைகளின்கீழ் நியாயமானவையாகவுள்ளனவென நம்பப்படுகின்ற பல்வேறு ஏனைய காரணிகளினதும் அடிப்படையிலானவை; இதன் பெறுபேறுகள், ஏனைய மூலங்களிலிருந்து உடனடியாக வெளிப்படையாகவிராத சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் நடைமுறைப்பெறுமதிகளின்மீது தீர்ப்புக்களைச் செய்வதன் அடிப்படையாக அமையும். மதிப்பீடுகளும் அடிப்படை ஊகங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அடிப்படையில்

மீளாயப்படுகின்றன. மதிப்பீடானது எந்தக் காலப்பகுதியில் செய்யப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியுடன் மட்டுமே மீளாய்வு தொடர்புபட்டிருப்பின், கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வுகள், அக்காலப்பகுதியில், அல்லது மீளாய்வானது நடப்பு மற்றும் எதிர்காலக் காலப்பகுதிகளுடன் தொடர்புபட்டிருப்பின், மீளாய்வுக்காலப்பகுதியிலும் எதிர்காலக் காலப்பகுதிகளிலும் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

### 1.4 இலாபமீட்டும் முயற்சி

நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, எதிர்நோக்கத்தக்க எதிர்காலத்தில் இலாபமீட்டும் முயற்சியொன்றாகத் தொடர்வதற்கு ஒழுங்கமைப்பின் பொறுப்புப்பற்றிய மதிப்பீட்டை நாம் செய்துள்ளோம். எதிர்காலம் பற்றிக் கிடைக்கக்கூடிய எல்லாத் தகவல்களையும் கணக்குக்கெடுத்து, ஒழித்துக்கட்டுதல் அல்லது வியாபாரத்தை இல்லாதொழித்தலுக்கான தேவையை நாம் எதிர்நோக்கவில்லை.

### 02. ஒப்பீட்டளவிலான தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன வென்பதுடன், முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றையும் ஒத்திருக்கின்றன.

### 03. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக்கொள்கைகள்

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், இந்நிதிசார் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட எல்லாக் காலப்பகுதிகளுக்கும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவென்பதுடன், கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுமுள்ளன.

### 3.1 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள்

நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இனங்கள் இலங்கை ரூபாக்களை (இரூ) பயன்படுத்தி அளவீடுசெய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள், அக்கொடுக்கல்வாங்கல்கள் செய்யப்பட்ட திகதிகளில் நிலவுகின்ற வீதங்களைப் பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயமாக மாற்றப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் கொடுத்துத்தீர்த்தலிலிருந்து விளைகின்ற வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகைகளும் நட்டங்களும் வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. ஐந்தொகைத் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துக்காட்டப்பட்ட பணவகையான சொத்துக்களும் பொறுப்புக்களும், அத்திகதியில் நிலவுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களாக மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துக்காட்டப்பட்ட பணவகையான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மாற்றுவதிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகைகளும் நட்டங்களும், ஐந்தொகையில் செலாவணி வீதச் சமப்படுத்துகை ஒதுக்கினுள் தனிவேறாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.2 ஆதனமும், பொறித்தொகுதியும், சாதனமும்

#### அ) ஏற்றங்கீகாரமும் அளவீடும்

ஆதனமும், பொறித்தொகுதியும், சாதனமும், ஒன்றுதிரண்ட தேய்மான மற்றும் ஒன்றுதிரண்ட பாதிப்பு நட்டங்களைக் கழித்து ஆகுசெலவில்/மீள்பெறுமானமதிப்பீட்டில் கூறப்படுகின்றன.

ஆகுசெலவு என்பது, சொத்தின் கொள்ளுதலுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதான செலவினத்தையும் உள்ளடக்கும். சுயநிர்மாணச் சொத்துக்களின் ஆகுசெலவு, ஆகுசெலவுப் பொருட்கள், நேரடித் தொழிலாளர் செலவுகள், சொத்துக்களின் உட்கருதப்பட்ட பயன்பாட்டுக்காக அவற்றைத் தொழிற்பாட்டு நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலனவான வேறெவையேனும் ஆகுசெலவுகள் என்பவற்றையும், இனங்களைக் கழற்றி அகற்றுவதற்கும் அவை அமைந்துள்ள அமைவிடத்தை மீட்டெடுப்பதற்குமான ஆகுசெலவுகளையும் உள்ளடக்கும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதன இனமொன்று வெவ்வேறு பயனுகர் காலங்களைக்கொண்ட பாரிய ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளவிடத்து, அவை, ஆதனத்தின், பொறித்தொகுதியின் மற்றும் சாதனத்தின் தனிவேறான இனங்களாகக் கணக்குக்காட்டப்படுகின்றன.

ஆதன, பொறித்தொகுதி மற்றும் சாதன இனங்களைக் கையுதிர்ப்பதன் மேல் ஏற்படும் ஈட்டுகைகளும் நட்டங்களும், கையுதிர்ப்பிலிருந்தான வரும்படிகளை ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பன கொண்டுள்ள தொகையுடன் ஒப்பிடுவதன்மூலம் தீர்மானிக்கப்பட்டு, வருமானக்கூற்றில் “வேறு தொழிற்பாட்டு வருமானத்தினுள்” தேறியனவாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**ஆ) தேய்மானம்**

தேய்மானத்துக்கான ஏற்பாடு, அவற்றின் ஆகுசெலவை அல்லது மீள்பெறுமானம் மதிப்பீடுசெய்யப்பட்ட தொகைகளை, இறையிலிக் காணிதவிர எல்லா ஆதனங்களினதும், பொறித்தொகுதிகளினதும், சாதனங்களினதும் மதிப்பிடப்பட்ட பயனுகர்காலங்களின்மீது அவற்றின் எஞ்சியுள்ள பெறுமதிகளுக்கு அவற்றின் ஆகுசெலவை அல்லது மீளப்பெறுமானம் மதிப்பிடப்பட்ட தொகைகளைக் குறித்தொதுக்குவதற்கு நேர்க்கோட்டு முறையொன்றைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது.

பயன்படுத்தப்பட்ட பிரதான வருடாந்தவீதங்கள் பின்வருமாறாகும்.

1. கட்டிடம் 5%
2. அலுவலகச் சாதனங்கள் 25%
3. மோட்டார் வாகனங்கள் 20%
4. தளபாடங்களும் பொருத்திகளும் 10%

மீளப்பெறுமானம் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள்மீதான கருத்துருவத் தேய்மான வரலாற்றுமுறையான ஆகுசெலவுத் தேய்மான விதிப்பனவின்மேல் அச்சொத்துக்களின் மீதான வருடாந்தத் தேய்மான விதிப்பனவின் விஞ்சுதொகைக்குச் சமமான தொகையொன்று மீள்பெறுமானமதிப்பீட்டிலான மேன்மிகையிலிருந்து வருடாந்தம் ஒன்றுதிரண்ட இலாபத்திற்குக் கைமாற்றப்படுகின்றது. சொத்துக்கள் கொண்டுள்ள தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்படற்பாலதான தொகையிலும் பார்க்க அதிகமாகவிருப்பின், சொத்துக்கள் கொண்டுள்ள தொகை அதன் அறவிடப்படற்பாலதான தொகைக்கு உடனடியாக எழுதப்படுகின்றது.

**இ) கையுதிர்ப்பு**

கையுதிர்ப்புக்களின்மீதான ஈட்டுகைகளும் நட்டங்களும், கொண்டுள்ள தொகையுடன் வரும்படிகளை ஒப்பிடுவதன்மூலம் தீர்மானிக்கப்படுகின்றன என்பதுடன், வருமானக்கூற்றில் தொழிற்பாட்டு இலாபத்தை அல்லது நட்டத்தைத் தீர்மானிப்பதில் ஏற்றங்கீகரிக்கவும்படுகின்றன. மீளப்பெறுமானம்மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் விற்பனைசெய்யப்படும்போது, மீள்பெறுமானமதிப்பீட்டு ஒதுக்கில் உள்ளடக்கப்பட்ட தொகை, வைத்திருக்கப்பட்ட ஈட்டுகைகளுக்குக் கைமாற்றப்படுகின்றது.

**ஈ) பாதிப்பு**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் கொண்டுள்ள பெறுமதி, ஒன்றில் வருடாந்தம், அல்லது நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளிலான மாற்றங்கள், அக்கொண்டுள்ள பெறுமதி அறவிடப்படமுடியாதிருக்கலாமெனச் சுட்டிக்காட்டும்போது, மீளாயப்படுகின்றது. அத்தகைய சுட்டிக்காட்டுகை இருப்பின், அத்துடன் கொண்டுள்ள பெறுமதி மதிப்பிடப்பட்ட அறவிடப்படற்பாலதான தொகையை விஞ்சுமிடத்து, சொத்துக்கள் அவற்றின் அறவிடப்படத்தக்க தொகைக்கு எழுதப்படுகின்றன. பாதிப்பு நட்டங்கள், அதே சொத்துக்காக முன்னைய மீள்பெறுமானமதிப்பீட்டு மேன்மிகையை அது எதிர்மாறாக்கினாலொழிய, வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**உ) ஆதனம், பொறித்தொகுதி சாதனம் என்பவற்றின் விற்பனைகளினாலான இலாபம்/நட்டம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் பின்னடைவுமீதான அல்லது கையுதிர்ப்பின்மீதான எவையேனும் ஈட்டுகைகள் அல்லது நட்டங்கள், விற்பனை இடம்பெறுகின்ற காலப்பகுதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்டு ஏனைய எல்லாமடங்கிய வருமானமாக வகுப்பாக்கஞ் செய்யப்படுகின்றன.

**3.4 நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை**

ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு பூர்த்திசெய்யப்படாதவையும் ஆண்டின்போது உறப்பட்டவையுமான மூலதனச் செலவுகள் முற்பணக் கொடுப்பனவுகளாகக் காட்டப்படுகின்றன; ஆண்டின்போது பூர்த்திசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ள மூலதனச் சொத்துக்கள், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பவற்றுக்குக் கைமாற்றப்பட்டுள்ளன.

**3.5 அருவச் சொத்துக்கள்**

கணிசமானளவு பயனுகர் காலங்களையுடையவையும் கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்படுகின்றவையுமான அருவச் சொத்துக்கள், ஒன்றுதிரண்ட கடன்தீர்த்தல் மற்றும் ஒன்றுதிரண்ட பாதிப்பு நட்டங்களைக் கழித்து ஆகுசெலவில் அளவீடுசெய்யப்படுகின்றன. கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்களைப் பேணுதலுடன் இணைந்த ஆகுசெலவுகள், உறப்பட்டவாறான செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட இனங்காணத்தக்க மற்றும் தனித்துவமான மென்பொருள் உற்பத்திப்பொருட்களின் வடிவமைப்புக்கும் பரீட்சிப்புக்கும் நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலனவான அபிவிருத்திச் செலவுகள் அருவச் சொத்துக்களாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**அ) ஏற்றங்கீகாரத்தின் அடிப்படை**

சொத்துக்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலனவான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் உருவகத்தைச் சென்றடைந்து ஒன்றுதிரண்ட கடன்தீர்த்தல் மற்றும் ஒன்றுதிரண்ட பாதிப்பு நட்டங்களைக் கழித்து ஆகுசெலவை நம்பகமானமுறையில் அளவீடுசெய்து ஆகுசெலவில் கொண்டிருக்கக்கூடியமை நிகழ்தகவாக இருப்பின் அருவச் சொத்தொன்று ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**ஆ) அடுத்துப்பின்னரான செலவினம்**

அடுத்துப்பின்னரான செலவினம், அது எந்தக் குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பானதோ அந்தக் குறிப்பிட்ட சொத்துக்களில் அடங்கியுள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அது அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றது. உள்ளகரீதியில் தோற்றுவிக்கப்பட்ட நற்பெயரும் வகைகளும் உட்பட, மற்றெல்லாச் செலவுகளும் உறப்பட்டவாறாக வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**இ) பின்னடைவும் கையுதிர்ப்பும்**

அருவச் சொத்தொன்று, கையுதிர்ப்பின்மீது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்தும் அடுத்துப்பின்னரான கையுதிர்ப்பிலிருந்தும் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எவையும் எதிர்பார்க்கப்படாதபோது ஏற்றங்கீகரிக்கப்படுவதில்லை.

**ஈ) கடன் தீர்த்தல்**

அருவச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ளகாலங்களின்மேல் நேர்க்கோட்டு அடிப்படையின்மீது அவை பயன்பாட்டுக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள திகதியிலிருந்து, கடன்தீர்த்தலானது வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**உ) பாதிப்பு**

பாதிப்புகளின் ஏதேனும் சுட்டிக்காட்டுகை இருப்பதனைத் தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் கொண்டுள்ள தொகைகள் மீளாயப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் சுட்டிக்காட்டுகை இருப்பின், சொத்துக்களின் அறவிடப்படற்பாலதான தொகை மதிப்பிடப்படுகின்றது. ஒரு சொத்து கொண்டுள்ள தொகை அல்லது அதன் பணம் தோற்றுவிக்கும் அலகு அதன் அறவிடப்படற்பாலதான தொகையை விஞ்சும்போதெல்லாம், பாதிப்பு நட்டம் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது. பாதிப்பு நட்டங்கள் வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**3.6 முதலீட்டு ஆதனங்கள்**

நீண்டகால ஈட்டுகைகளுக்காக அல்லது மூலதன மதிப்பேற்றத்துக்காக அல்லது இரண்டுக்காகவும் வைத்திருக்கப்பட்டு முதலீட்டு ஆதனமாக வகுப்பாக்கஞ் செய்யப்படும் ஆதனம். தொடக்க ஏற்றங்கீகாரத்துக்குப்பின்னர் முதலீட்டு ஆதனம் ஆகுசெலவைக் கொண்டிருக்கும்.

**3.7 குறுகியகால முதலீடுகள்**

**அ) உள்நாட்டு நாணயத்திலான குறுகியகால முதலீடுகள்**

ஐந்தொகைத் திகதியன்று நிலவுகின்ற செலாவணிவீதத்தில் பெறுமதிமதிக்கப்பட்ட வெளிநாட்டுநாணயத்தில் குறிக்கப்பட்ட நிலையான வைப்புக்கள்தவிர, கூட்டுத்தாபனம் அரசாங்கத் திறைசேரி உண்டியல்களிலும் ஏனைய நிலையான வருமானமுதலீடுகளிலும் குறுகியகால மேன்மிகை நிதிகளைச் செய்து ஆகுசெலவில் கணக்கிட்டுள்ளது. இம்முதலீடுகளின்மீது ஒன்றுதிரண்ட வட்டி, வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**ஆ) வெளிநாட்டு நாணயத்திலான குறுகியகால முதலீடுகள்**

வெளிநாட்டு நாணயத்தில் எதிர்கால உரிமைக்கோரிக்கைகள் கடப்பாட்டை ஈடுசெய்வதற்குத் தேவையான நிதிகள் தள்ளிவைக்கப்பட்டு, வட்டி ஈட்டுகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளன. ஒன்றுதிரண்ட வட்டிகள், கொடுக்கல்வாங்கல் திகதியில் நிலவுகின்ற வீதத்தில் மாற்றப்பட்ட வருமானக்கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளன. நிதிசார் கூற்றுக்களில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளின் பெறுமதிகள் ஐந்தொகைத் திகதியன்று நிலவுகின்ற வீதத்தில் மாற்றப்படுகின்றன.

**3.7.1 நிதிசார் சாதனங்களிலிருந்து எழுகின்ற அபாயம்**

குறுகியகால மற்றும் நீண்டகால முதலீடுகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், அரச வங்கி நிலையான வைப்புக்கள் மற்றும் கடன்தொகுதிப்பத்திரங்களிற் செய்யப்பட்ட முதலீடுகளைக் கொண்டுள்ளன. கடன்தொகுதிப்பத்திரங்கள், வட்டிவீத அபாயம், மீள்முதலீட்டு அபாயம், தவணைதவறுகை அபாயம் மற்றும் திரவத்தன்மை அபாயம் என்பவற்றைக் கொண்டுள்ளன. நிலையான வைப்புக்கள் முதிர்வுவரை வைத்திருக்கப்படுவதனால், உள்நாட்டு நாணய நிலையான வைப்புக்களுக்கு உள்ளார்ந்தனவாகவுள்ள ஏனைய அபாயங்களுடன்சேர்த்து நாணய ஏற்றத்தாழ்வுகளின் அபாயத்துக்கு வெளிக்காட்டப்பட்டனவாகவுள்ள வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட நிலையான வைப்புக்கள்தவிர, அவை தவணைதவறுகை மற்றும் திரவத்தன்மை அபாயங்களைமட்டுமே கொண்டுள்ளன. இம்முதலீடுகளை அரச வங்கிகளில் வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில், கூறப்பட்ட எல்லா அபாயங்களும், வெளிநாட்டு நாணயப் பெறுமதி ஏற்றத்தாழ்வு அபாயம்தவிர மிகக்குறைந்தனவாகவுள்ளன.

**3.8 வியாபார மற்றும் ஏனைய பெறப்படற்பாலவை**

வியாபார மற்றும் ஏனைய பெறப்படற்பாலவை, தேறிப்பெறப்படுவதற்கு மதிப்பிடப்பட்ட தொகையில் கூறப்படுகின்றன. மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு மேற்பட நிலுவையாகவுள்ள அறவிடமுடியா, ஐயக் கடன்களுக்காக நிதிசார் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**3.9 பொருட்பதிவேடுகள்**

எழுதுகருவிவகை மற்றும் நுகரத்தக்க இனங்களின் கையிருப்பைப் பொருட்பதிவேடுகள் கொண்டுள்ளன. காலங்கடந்த மற்றும் பழுதுபார்க்கப்படத்தக்க இனங்களுக்காக ஏற்பாடுசெய்தபின்னர், பொருட்பதிவேடுகள் ஆகுசெலவின் குறைந்ததொகையில் அல்லது தேறிய தேறிப்பெறப்படத்தக்க பெறுமதியில் பெறுமதி மதிப்பிடப்படுகின்றன. தேறிய தேறிப்பெறப்படத்தக்க

பெறுமதி என்பது, தொழிலின் சாதாரண நெறியின்போது பொருட்பதிவேடுகள் எந்த விலைக்கு விற்பனைசெய்யப்படமுடியுமோ அந்த விலையாகும்.

**3.10 பணமும் பணத்துக்குச் சமமானவையும்**

பணமும் பணத்துக்குச் சமமானவையும், பணவோட்டக் கூற்றின் நோக்கத்துக்காகப் பணத்தின் அறியப்பட்ட தொகைகளுக்கு உடனடியாக மாற்றத்தக்கனவான கையிலுள்ள பணமும் குறுகியகால உயர் திரவத்தன்மைகொண்ட முதலீடுகள் என வரைவிலக்கணங்கூறப்படுகின்றன. பணமும் பணத்துக்குச் சமமானவையும், கையிலுள்ள பணத்தையும் தேறிய நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களையும் குறுகியகாலக் கடன்பெறுகைகளையும் குறுகியகால முதலீடுகளையும் கொண்டுள்ளன.

**3.11 பணவோட்டக் கூற்றுக்கள்**

பணவோட்டக் கூற்றுக்கள், லங்கா கணக்கீட்டு நியமத்துக்கிணங்க-(லகநி) இல. 09- பணவோட்டக் கூற்றுக்கள், நேரடியற்றமுறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

**4. ஊழியர் நன்மைகள்**

**அ) வரைவிலக்கணங்கூறப்பட்ட நன்மைத்திட்டம் - ஓய்வுபெறுகைப் பணிக்கொடை**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின்கீழான ஓய்வுபெறுகை நன்மைக் கட்டுப்பாட்டுக்கான பொறுப்பு, ஒழுங்கமைப்பின் ஊழியர்களைக் காப்பீடுசெய்கின்ற வரையறுக்கப்பட்ட நன்மைத்திட்டமாகும். இப்பொறுப்பை ஈடுசெய்வதற்கென, முதலாவது சேவையாண்டிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு பூர்த்திசெய்யப்பட்ட சேவையாண்டுக்காகவும் எல்லா ஊழியர்களினதும் நிதியாண்டின் கடைசிமாதத்தின் அரைமாதச் சம்பளத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகைக்குச் சமமாக ஐந்தொகையில் ஏற்பாடொன்று முன்னெடுத்துச்செல்லப்படுகின்றது. ஆண்டின் தொடக்கத்தில் முன்கொணரப்பட்ட ஏற்பாட்டுக்கும் ஆண்டின் முடிவில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஏற்பாட்டுக்கும் இடையே விளைகின்ற வேறுபாடு வருமானக்கூற்றில் கையாளப்படுகின்றது. அவ்வாறு ஏற்றங்கீகரிக்கப்பட்ட தொகைகள் தனிவேறாக முதலீடுசெய்யப்பட்டுள்ளன.

**ஆ) உதவுதொகைத் திட்டத்தை வரையறுத்துக்கூறுதல்**

ஊழியர் சகாய நிதியமும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியமும் முறையான நியதிச்சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இசைய, ஊழியர்கள், ஊழியர் சகாய நிதிய உதவுதொகைகளுக்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு உதவுதொகைகளுக்கும் உரித்துடையோராகவுள்ளனர்.

**5. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

கடந்தகால நிகழ்வுகளின் விளைவாகத் தற்போதைய சட்ட/ஆக்கபூர்வமான கடப்பாடு உள்ளபோது பொறுப்புக்களும் ஏற்பாடுகளும் ஐந்தொகையில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன; இதனைக் கொடுத்துத்தீர்த்தல், பொருளாதார நன்மைகளை அடக்கிய மூலவளங்களின் வெளிச்செல்கையை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடன்கொடுநரின்

கோரிக்கையின்பேரில் அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டினுள் செலுத்தப்படற்பாலனவான கடப்பாடுகள், ஐந்தொகையில் நடப்புப் பொறுப்புக்களாகக் கொள்ளப்படுகின்றன. ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டுக்குப்பின்னர் செலுத்தப்படற்பாலனவான பொறுப்புக்கள், ஐந்தொகையில் நடப்புப்பொறுப்புக்கள் சாராதவையாகக் கொள்ளப்படுகின்றன.

**அ) வியாபார மற்றும் வேறு செலுத்தப்படற்பாலவை**

வியாபார மற்றும் வேறு செலுத்தப்படற்பாலவை அவற்றின் ஆகுசெலவில் கூறப்படுகின்றன.

**ஆ) செலாவணிவீதச் சமப்படுத்துகை ஒதுக்கு**

வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கப்பலேற்றுகைக்கு முன்னரான/பின்னரான கடன் உத்தரவாதங்கள் தொடர்பில் வெளிநாட்டு நாணயங்களில் பெறப்பட்ட கட்டுப்பணங்கள், வட்டிகொண்டிருக்கின்ற சேமிப்புகளில்/முதலீடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன. செலாவணிவீதங்கள் நாளாந்த அடிப்படையில் ஏற்றத்தாழ்வடைகின்றன. சேமிப்புகளினதும் முதலீடுகளினதும் பெறுமதிகளும் காலத்துக்குக்காலம் மாறுகின்றன. வெளிநாட்டு நாணயங்களில் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் எதிர்கால உரிமைக்கோரிக்கைகளின் கடப்பாட்டை ஈடுசெய்வதற்கு இம்முதலீடுகள் தள்ளிவைக்கப்படுகின்றன. பெறுமதியிலான ஏற்றத்தாழ்வுகளிலிருந்து எழுகின்ற ஈட்டுகைகள் அல்லது நட்டங்கள் வருமானக்கூற்றுக்குப் பொறுப்பிக்கப்படின், பெறுபேறுகள் பிழைவழியுய்க்கின்ற நிதிசார் பெறுபேறுகளைக் குறிக்கலாம். ஆகவே நாணயங்களின் பெறுமதியிலான ஏற்றத்தாழ்வுகள் தனிவேறான ஒதுக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளன. முதலீடுகளின் பெறுமதியிலான எவையேனும் எதிர்கால மாற்றங்கள் இவ்வொதுக்குக்கெதிராகப் பொறுப்பிக்கப்பட்டு சீர்செய்யப்படும்.

**இ) உரிமைக்கோரிக்கைகளுக்கான எதிர்பாராநிலைமை ஏற்பாடு**

பயணச்செலவு உத்தரவாதங்களுக்கான உரிமைக்கோரிக்கைகளைச் செலுத்துதல் விகிதம் தொடர்பில் எமது கடந்தகால அனுபவங்கள், பெறப்பட்ட கட்டுப்பணத்தின் 30 சதவீத எல்லையினுள் இருந்துள்ளன. கட்டுப்பணம் பெறப்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டுக் காலப்பகுதிக்குமேலாகப் பெறப்பட்ட கட்டுப்பணம், உரிமைக்கோரிக்கைப் பொறுப்பைக் கொண்டிருக்கும். கடந்தகால அனுபவத்துக்கு இசைய, பயணக் கடன் உத்தரவாதங்களுக்கான செலவுக்காக முறையே 15%, 10% மற்றும் 5% என்ற விகிதாசாரத்தின்மீது அம் மூன்றாண்டுக்காலப்பகுதிக்குமேலாக, பெறப்பட்ட கட்டுப்பணத்தின் 30 சதவீதம்வரையான ஏற்பாடு எதிர்பாராநிலைமை உரிமைக்கோரிக்கைகளுக்கான ஏற்பாடாக வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டின் முடிவிலுள்ளவாறாகப் பிரதிபலிக்கப்படுகின்ற மீதிகளுடன் ஒத்திருக்கும்வகையில் ஏற்பாடானது ஒவ்வோராண்டும் சீர்செய்யப்படலாம்.

ஏனைய உற்பத்திப்பொருட்களுக்கான ஏற்பாடுகள் பின்வரும் அடிப்படைக்கிணங்க உருவாக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விற்பனையாளரின் அபாயக் காப்புறுதிப்பத்திரம் | 15% |
| ATA கார்னெட்முறைமைமீதான நேரடி உத்தரவாதம் | 2% |
| கப்பலேற்றுகைக்குமுன்னரான கடன் உத்தரவாதம் | 12% |
| கப்பலேற்றுகைக்குப்பின்னரான கடன் உத்தரவாதம் | 5% |

**ஈ) அறிக்கையிடப்பட்ட உரிமைக்கோரிக்கைகளுக்கான ஏற்பாடு**

இவ்வேற்பாட்டை உருவாக்கும்போது அறிக்கையிடப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் ஏற்றங்கீகரிக்கப்பட்டு கணக்குக்கெடுக்கப்பட்டுள்ளன. நியாயமானவிடத்து ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு நிலவிய நிலைமைகளின்மீது உரிமைக்கோரிக்கைகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படவேண்டுமென்ற நிகழ்தகவு உள்ளதென்ற நிகழ்வுபற்றி சான்றுகளும் வாக்குறுதிகளும் கிடைக்கக்கூடியனவாகவுள்ளன. அடுத்துப்பின்னர் உரிமைக்கோரிக்கைகளைக் கொடுப்பனவுசெய்தல், செய்யப்பட்ட ஏற்பாட்டுக்கெதிராக எதிரீடு செய்யப்படும். செய்யப்பட்ட ஏற்பாட்டின் தொடர்ச்சி, உரிமைக்கோரிக்கைகளுக்கான பொறுப்பின் நிகழ்தகு சம்பவங்கள் உள்ளமையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**உ) முடிவுறாத அபாயத்தின்மீது ஈட்டப்படாத கட்டுப்பணத்துக்கான ஒதுக்கு**

மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது எழுதப்பட்டு பெறப்பட்ட கட்டுப்பணமும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட கட்டுப்பணத்தின்மீதான முடிவுறாத அபாயமும் எந்தக் காப்பீட்டுக் காலப்பகுதியில் கட்டுப்பணத்தின் பாகம் அடுத்த நிதியாண்டுக்குத் தொடர்புபட்டதாக உள்ளதோ அந்தக் காப்பீட்டுக்காலப்பகுதிக்கு மேலானதாகவிருக்கும். கைத்தொழில் நியதிகளுக்கிசைய நடப்பு நிதியாண்டு முடிந்தபின்னரான காப்பீட்டுக்காலப்பகுதிக்காக விகிதாசாரக் கட்டுப்பணத்தைத் தனிப்படுத்துவதன்மூலம் ஒதுக்கொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒதுக்கைத் தீர்மானிப்பதில் 1/365 என்ற முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒதுக்கை ஏற்றங்கீகரிப்பதில், முடிவுறாத அபாயங்களின்மீதான உள்ளபடியான காப்பீட்டுக்காலப்பகுதி, ஏற்றுமதிக் கொடுப்பனவுகள் காப்புறுதிப்பத்திரங்களின்மீது சேகரிக்கப்பட்ட கட்டுப்பணத்தின்மீது கணக்குக்கு எடுக்கப்பட்டுள்ளது. மீளாய்வின்கீழுள்ள ஆண்டின்போது உத்தரவாதங்களின்மீது சேகரிக்கப்பட்ட கட்டுப்பணத்தின் 15%, காப்பீட்டுக்காலப்பகுதியினுள் இணைந்துள்ள அபாயங்களின் சிக்கலானதன்மை, தன்மை மற்றும் அளவு என்பவற்றைக் கவனத்துட்கொண்டு முடிவுறாத அபாயங்களுக்கான ஒதுக்காகத் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

**6. அரசிறை**

**6.1 கட்டுப்பண வருமானம்**

கட்டுப்பண வருமானத்திலிருந்து பெறப்பட்ட அரசிறை, ஆண்டின் முடிவுவரை சமர்ப்பிக்கப்பட்ட எல்லா வெளிப்படுத்துகைகளையும் கணக்குக்கு எடுப்பதன்மூலம் ‘ஒன்றுதிரளுகை அடிப்படையின்’ மீது ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளது. அபாயங்களையும் வெகுமதிகளையும் கைமாற்றுதல், ஒப்பந்தத்தின் தனிப்பட்ட நியதிகளைப் பொறுத்து வேறுபடுகின்றது. செலவின இனங்களெல்லாம் ‘ஒன்றுதிரளுகை அடிப்படையின்’ மீது கணக்குக்காட்டப்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றை ஒத்திருக்கின்றன.

**6.2 வேறு தொழிற்பாட்டு வருமானம்**

**அ) ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பவற்றின் விற்பனையிலிருந்தான இலாபமும் நட்டமும்**

ஆதனத்தினதும், பொறித்தொகுதியினதும், சாதனத்தினதும் பின்னடைவின்மீதான எவையேனும் ஈட்டுகைகளும் அல்லது நட்டங்களும், விற்பனை எந்தக் காலப்பகுதியில் இடம்பெறுகின்றதோ அந்தக் காலப்பகுதியில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றனவென்பதுடன், வேறு தொழிற்பாட்டு வருமானமாக வகுப்பாக்கஞ்செய்யவும்படுகின்றன.

**6.3 செலவை ஏற்றங்கீகரித்தல்**

**அ) அரசிறைச் செலவினம்**

வருமானக்கூற்றில் காட்டப்பட்டவாறு கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட இலாபம், அறியப்பட்ட எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் ஆதனத்தினதும், பொறித்தொகுதியினதும், சாதனத்தினதும் தேய்மானத்துக்காகவும் ஏற்பாடுசெய்தபின்னராகும்.

வருமானக்கூற்றை முன்வைக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர்கள், செலவுகளின் பணியாற்றுகை முறை தொழில்முயற்சியின் செயல்நிறைவேற்றத்தினது அம்சங்களை நியாயமானமுறையில் முன்வைக்கின்றதென அபிப்பிராயப்படுகின்றனர்; ஆகவே, இந்த முன்வைப்பு முறை கடைப்பிடிக்கப்படுகின்றது.

**ஆ) மூலதனச் செலவினம்**

தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான வழிவகைகள்மூலம் நிரந்தரமான தன்மையினவான சொத்துக்களை விசாலிக்கும் அல்லது சீராக்கும் நோக்கங்களுக்காக அல்லது தொழிலின் ஈட்டுகை ஆற்றலை அதிகரிக்கும் நோக்கங்களுக்காக உறப்பட்ட செலவினம், மூலதனச் செலவினமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆதனத்தினதும், பொறித்தொகுதியினதும், சாதனத்தினதும் கையுதிர்ப்பின்மீது அரசிறைத் தன்மையினவான ஈட்டுகைகள் அல்லது நட்டங்கள், வருமானக்கூற்றில் கணக்குக்காட்டப்பட்டுள்ளன.

**6.4 வரிவிதித்தல்**

வருமானவரிச் செலவுகள்

ஆண்டுக்கான வருமானவரிச் செலவுகள் முதலீட்டு வருமானத்தின்மீதான வரியைக் கொண்டுள்ளது. அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது பெருமளவில் சட்டமாக்கப்பட்ட வரிவீதங்களையும் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரிக்கான எவையேனும் சீர்செய்தல்களையும் பயன்படுத்தி, ஆண்டுக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது செலுத்தப்படற்பாலதான எதிர்பார்க்கப்பட்ட வரிக்காக வருமானக்கூற்றில் வருமானவரி ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது. வரிவிதித்தலுக்கான ஏற்பாடு, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அவற்றுக்கான திருத்தங்களுக்குமிணங்க வரிவிதித்தல் நோக்கங்களுக்காகச் சீர்செய்யப்பட்ட ஆண்டுக்கான முதலீட்டு வருமானத்தின் அடிப்படையிலானது.

**6.5 கடன்பெறுகைச் செலவுகள்**

கடன்பெறுகைச் செலவுகள், அவை எவ்வாண்டில் உறப்பட்டனவோ அவ்வாண்டிலான செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

**6.6 ஒப்பீட்டுத் தகவல்கள்**

ஒப்பீட்டுத் தகவல்கள், நடப்பாண்டின் முன்வைப்புக்கு இசைந்தொழுகும்வகையில் அவசியமானவிடத்து மீள்வகுப்பாக்கஞ்செய்யப்பட்டுள்ளன.

**6.7 பொறுப்புக்களும் எதிர்பாராநிலைமைகளும்**

எதிர்பாரா நிலைமைகள், கடந்தகால நிகழ்வொன்றிலிருந்து எழுகின்ற இயல்திறச்சொத்துக்களாக அல்லது கடப்பாடுகளாகவுள்ளனவென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட திட்டவட்டமற்ற எதிர்கால நிகழ்வுகளின் இடம்பெறுகைகளின்மீது அல்லது இடம்பெறாமையின்மீது மட்டுமே உறுதிப்படுத்தவும்படும்.

**6.8 ஐந்தொகைத் திகதிக்குப்பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள்**

ஐந்தொகைக்குப்பின்னரான முக்கியமான எல்லா நிகழ்வுகளும், ஏற்புடையதானவிடத்து வெளிக்காட்டப்பட்டனவாகவும் சீர்செய்யப்பட்டனவாகவும் கருதப்பட்டுள்ளன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஆர்ஈ/டீ/ஈசீஐ/01/15/39    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2016 ஒக்தோபர் 17

தலைவர்,
இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

**இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2016 யூன் 09 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

3

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முறையே ரூபா 3,217,783 கிரயமான மோட்டார் வாகனம் மற்றும் ரூபா 160,619 கிரயமான அலுவலக உபகரணங்கள் ஆகியன முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டவாறிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,103,756 கூட்டுத்தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களுக்காக விரிவான பட்டோலையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

2000 சனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி, கூட்டுத்தாபனத்திற்குரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 38 உத்தியோகத்தர்களுக்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரியான ரூபா 543,420 தொகை கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 174,076,132 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 161,692,641 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,383,491 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட சொத்தொன்றிற்காக பெறப்பட்ட ரூபா 42,026,970 தொகையான வருமானமும் ஏற்றுமதி கடன் காப்புறுதி வருமானம் ரூபா 37,039,904 இனால் அதிகரித்தமையும் நட்டஈட்டுச் செலவினம் ரூபா 37,039,904 இனாலும் விஷேட வரித்தொகை ரூபா 25,000,000 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்புத் தொடர்பில் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் மிகையில் சிறிய குறைவு ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 7 சதவீத அதிகரிப்பாக இருந்தது. ஊழியர் ஊதியம், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மற்றும்

அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி என்பவற்றின் சீராக்கலின் பின்னர் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 158,028,780 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அது முறையே ரூபா 237,420,722 மற்றும் ரூபா 284,898,395 ஆக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

(அ) பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்பவர்களுக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் கிடைக்காமை அல்லது தாமதமடைதல் தொடர்பாக காப்புறுதி உரித்தொன்றை விநியோகித்தல் மற்றும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் அல்லது கப்பலில் ஏற்றியதன் பின்னர் தேவையான பணம் வழங்குவதை இலகுபடுத்தும் வகையில் நிதி நிறுவனங்களுக்கு பிணை வழங்குதல்.

(ஆ) இலங்கையரினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதிகளின் போது இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியே நிறைவேற்ற வேண்டிய சேவைகளுக்காக ஏற்றுமதியாளர்களுக்கு பிணை வழங்குதல், பணமாக உதவி வழங்குதல் மற்றும் நிதியிடல் நிறுவனங்கள் வழங்குகின்ற கடன் வசதிகளுக்காக மீள் நிதி வசதிகளை வழங்குதல்.

(இ) வெளிநாடுகளில் மேம்படுத்தல் நடவடிக்கையின் போது செலவிடுவதற்கு ஏற்படக்கூடிய நட்டங்கள் தொடர்பான பிணைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாடுகளில் சந்தை ஆராய்ச்சி நடவடிக்கைகளை கையேற்றல், பல்வேறு பிரிவுகள் தொடர்பாக மாநாடுகள் மற்றும் பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களை சேகரித்து விளம்பரம் செய்தல்.

(ஈ) காப்புறுதி மற்றும் பிணை வழங்கல், தேசிய நலனுக்காக தேவையானது என அரசாங்கத்தினால் கருதப்படுகின்ற பொறுப்புக்களை கையேற்றலும் நிறைவேற்றுதலும், ஏற்றுமதி பன்முகப்படுத்துதல், ஏற்றுமதியை விரிவுபடுத்தல் மற்றும் புதிய சந்தைகளை தேடுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு உதவுதல் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையானது என கூட்டுத்தாபனம் கருதக்கூடிய ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுதல்.

நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிறுவன இயலளவை அதிகரிப்பதற்கு உதவும் காப்புறுதி உரிமை மற்றும் பிணைகளுக்கான நட்டஈடு செலுத்துவதற்கான வழிகாட்டல்கள் உள்ளடங்கிய கைநூலைத் தயாரிக்கும் பணிகள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தை பேணிச் செல்வதற்காகவும் அதிகரிப்பதற்காகவும் தேவையான "உற்பத்திகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி" என்ற தலைப்பின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

* உரித்து உரிமையாளர்களுக்காக இழப்பீடு செலுத்தாமையால் மிகையூதியப் படி உரித்து முன்மொழிவுத்திட்டத்தை மீள ஒழுங்கமைத்தல்.

* சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்காக (SMEs) காப்புறுதி மற்றும் பிணை உறுதிகளை ஏற்படுத்தல் மற்றும் அந்த முயற்சிகளை இணைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

* ஏற்றுமதிக் கடன் பிணை சான்றிதழ் (ஈசீஜீசீ கடன்) வழங்கும் நடவடிக்கைகளுக்காக பதவியணியினருக்கு பயிற்சியளிப்பதற்கு சர்வதேச சமூகத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

7

(இ) தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்காக ரூபா 37,000,000 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது அந்தப் பணிகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் மொத்த காப்புறுதி தவணைப்பண வருமானமான ரூபா 188,760,482 தொகையில் 33 சதவீதம் ஒரு ஏற்றுமதியாளரிடமிருந்தும் எஞ்சியதில் 72 சதவீதம் மேலும் 23 ஏற்றுமதியாளர்களிடமிருந்தும் கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருத்தல் சில ஏற்றுமதியாளர்களின் தங்கியிருத்தல் அவதானிக்கப்பட்டமையினால் கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருத்தல் மற்றும் வினைத்திறனை முன்னேற்றும் வகையில் புதிய ஏற்றுமதியாளர்களை இனங்காண்பதற்கு அறிவூட்டுவதற்காக முறையான திட்டமொன்று தயாரித்தல் காலத்தின் தேவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) நிறுவன இயலளவை அதிகரிப்பதற்காக 07 தலைப்புகளின் மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் கீழ் ரூபா 6,850,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,850,000 தொகை ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் (Common Wealth Capacity Building Programme) நிறைவேற்றப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காப்புறுதி உரித்து தொடர்பாக தவணைப்பணம் அறவிடும் போது, ஏற்றுமதியாளர்கள் 07 நாட்களுக்குள் காப்புறுதித் தவணைப்பணம் செலுத்துவார்களாயின் 5 சதவீத கழிவொன்று உரித்தாகின்ற போதிலும், அவ்வாறு குறிப்பிட்ட பிரகாரம் தவணைப்பணம் செலுத்தாத இரண்டு ஏற்றுமதியாளர்களுக்கும் கழிவாக ரூபா 345,756 தொகை வழங்கப்பட்டிருந்தது.

8

(ஆ) ஏற்றுமதியாளர் ஒருவருக்கு 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி ரூபா 2,878,127 தொகை நட்டஈட்டுப் பணமாகச் செலுத்தப்பட்டிருக்கும் போது அந்த ஏற்றுமதியாளரினால் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் தொடர்பாகவும் "நட்டஈடு பெறாமைக்கான மிகையூதியப் படி" (No Claim Bouns) ஆக ரூபா 93,227 தொகை கழிக்கப்பட்டு தவணைப்பணம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) கடன் அடிப்படையில் பொருட்கள் ஏற்றுமதி செய்கின்ற ஏற்றுமதியாளர்களின் ஆபத்தினை காப்புறுதி செய்யும் போது வெளிநாட்டு கொள்வனவாளர் தொடர்பான நிலைமை அறிக்கை பெறப்பட்டு அவற்றை மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் நிறுவனத்தின் நடைமுறையாக இருந்த போதிலும், மதிப்பீட்டின் போது ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாக 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் நட்டஈடு செலுத்தும் செலவினம் 87 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது மதிப்பீட்டு வழுவின் காரணமாக மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

I. 2014 அம் ஆண்டின் போது வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 4,000,000 தொகையான அங்கீகரிக்கப்பட்ட மூலதனமொன்று காணப்பட்ட வெளிநாட்டு கொள்வனவாளர் ஒருவருக்காக இரண்டு ஏற்றுமதியாளர்களுக்கு ரூபா 13,000,000 பிணையொன்று வழங்கப்பட்டிருந்தது, அந்த ஏற்றுமதியாளரால் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிக்காக, கொள்வனவாளர் பணம் செலுத்தாமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ரூபா 5,040,920 தொகையான நட்டஈட்டைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

II. வெளிநாட்டு கொள்வனவாளரின் நிதி பலம், திரவத்தன்மை, நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்வு விகிதாசாரம் பாதகமான நிலையில் காணப்பட்ட போதும் அது தொடர்பாக மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படாமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 867,462 தொகையான நட்டஈட்டினை செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

III. வெளிநாட்டு கொள்வனவாளர் தொடர்பான தர அறிக்கையில் பாதகமான நிதி நிலைமை காணப்பட்ட போதும், அதனைக் கவனத்திற் கொள்ளாது கடன் எல்லை தீர்மானிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக, ரூபா 1,267,563 தொகையான நட்டஈட்டைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

IV. வெளிநாட்டு கொள்வனவாளர் தொடர்பான தர அறிக்கையில் நீண்டகாலக் கடன் மூன்று வருடங்களான மிகவும் குறுகிய காலத்தில் 147 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை தொடர்பில் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தாதிருந்ததுடன் பின்னர் கொள்வனவாளர் முறிவடைந்தமையால் ஏற்றுமதியாளருக்கு ரூபா 10,079,299 நட்டஈட்டைச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி தவணை வருமானம் பொருட்களின் விலைப்பட்டியல்களின் பெறுமதியின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது. அந்த அட்டவணையின் பிரகாரம் கொடுப்பனவுக் கால எல்லை 01 நாள் முதல் 180 நாட்கள் வரை மேற்கொள்ளக்கூடியதாக தவணைப்பண வீதத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு ஏற்றுமதியாளரிடமிருந்து ஆறு வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு 360 நாட்கள் வரையிலான கடன் கால எல்லையொன்று வழங்கப்பட்டிருந்தது.

4.3 இனங்காணப்பட்ட நட்டம்

தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 9 ஆவது பிரிவின் பிரகாரம் விஷேட சுகையீனத்திற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க வைத்திய சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது அது ஏற்றுக்கொள்ளாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 507,603 தொகையான இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்துவதற்கு தொழில் நியாய சபையினால் கட்டளையிடப்பட்டிருந்தது.

4.4 **பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்காத உதவி முகாமையாளர் பதவிக்காக முறையான அங்கீகாரமின்றி 11 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 6,346,451 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்படாமையினால் 15-25 வருடங்களுக்கிடையே சேவை அனுபவத்துடன் உள்ள உத்தியோகத்தர்களை வெற்றிடப் பதவிகளுக்காக பதவியுயர்வு வழங்கும் திட்டமொன்று காணப்படவில்லை.

(இ) பிரதி பொது முகாமையாளர் (ஆளணி மற்றும் நிர்வாக) பதவி 2012 மார்ச் 18 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் நிறுவனத்தின் பதவியணியினர் முகாமைத்துவத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு இடையூறாக இருந்தது.

(ஈ) 2009 முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட 3 பதவிகளுக்காக நிரந்தர ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளாது பதில் கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டு 2015 சனவரி முதல் ஒக்தோபர் வரை ரூபா 378,817 பதிற்கடமைப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவன ரீதியான மீள் கட்டமைப்பு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2014 மே 01 ஆந் திகதி முதல் ஊழியர்களின் சம்பளம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2009 யூன் 01 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 30(1) ஆம் இலக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள படிநிலையை கவனத்தில்

11

கொள்ளாது நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவி மற்றும் சமதரத்திலுள்ள பதவிகளுக்காக சம்பள அளவுத் திட்டம் தீர்மானிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளது வரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி உரித்து மற்றும் பிணை விநியோகங்களுக்குரியதாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைகளை முன்னைய ஆண்டின் அளவுகளுடன் ஒப்பீடு செய்த போது சகல காப்புறுதி உரித்துக்களையும் விநியோகித்தல் 2014 ஆம் ஆண்டின் போது 12 சதவீதம் முதல் 46 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்ததுடன் அது நடப்பாண்டின் போது 41 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2012 பெப்ரவரி 10 ஆந் திகதி முதல் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தனியார் கணக்காய்வுக் கம்பனியொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 42,800,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

12

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வெளிநாட்டு கொள்வனவாளர்களின் மதிப்பீட்டு நடைமுறைகள் | தர அறிக்கை மதிப்பீட்டின் போது போதியளவான கவனம் செலுத்தப்படாமை |
| (ஆ) | ஊழியர் முகாமைத்துவம் | ஊழியர்கள் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகள் முறையாக இன்மை |
| (இ) | செயற்பாட்டு கட்டுப்பாடு | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கினை அடையாமை. |

ஒப்பம் : எச். எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி